விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 புரட்டாதி 11 முஹற 1 இதழ் 225
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 27-9-84

## பல்கலைக்கழக அனுமதி விகிதாசாரமுறையில்மாற்றம்!

### பின்தங்கிய பகுதியிலிருந்து வவனியா நீக்கப்பட்டது!!

(கொழும்பு)

பல்கலைக்கழக அனுமதிக்கான விகிதாசார முறையில் மாற்றம் செய்ய வேண்டுமென இது பற்றி ஆராய்ந்த குழு சிபார்சு செய்துள்ளது.

அகில இலங்கை ரீதியில் 30 வீத மாணவர்களும், மாவட்ட ஒதுக்கீட்டு முறையில் 65 வீத மாணவர்களும், பின்தங்கிய மாவட்டத்திற்கு 5 வீத மாணவர்களும் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதே இந்த சிபார்சாகும்.

இதே வேளை பின்தங்கிய மாவட்டங்களாக அம்பாந்தோட்டை, மன்னார், முல்லைத்தீவு, பதுளை ஆகிய மாவட்டங்களே சிபார்சு செய்யப்பட்டுள்ளன. வவனியா பின்தங்கிய பகுதியாக கணிக்கப்படவில்லை.

பல்கலைக்கழக அனுமதியில் ஏற்படும் வெற்றிடங்களை பின்தங்கிய மாவட்டங்களிலிருந்து நிரப்பும் இப்போதைய சட்டத்தை மாற்றி, சகல மாவட்டத்திலிருந்தும் சனத்தொகை விகிதாசாரப்படி நிரப்ப வேண்டும் என்றும் சிபார்சு செய்துள்ள இக்குழு, பல்கலைக்கழக அனுமதிக்கான பரீட்சை முறையிலும் மாற்றம் செய்ய

(5-ம் பக்கம் பார்க்க)

# முல்லைத்தீவு திடீர் முகாமில் 150 இளைஞர்கள் விசாரணையில்!

(நமது நிருபர்)

திடீர் இராணுவமுகாமாக மாற்றப்பட்டிருக்கும் முல்லைத்தீவுப் பகுதியிலுள்ள மூன்று பாடசாலைகளில் ஒன்றான புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்துக்கு நான்கு இலங்கை போக்குவரத்துச் சேவை பஸ்களில் நூற்றிஐம்பது இளைஞர்கள் நேற்றுப் பகல் விசாரணைக்காக கொண்டுவரப்பட்டனர்.

குமுளமுனை, தண்ணீரூற்று அலம்பில் ஆகிய இடங்களில் நேற்று இராணுவத்தினர் வீடு வீடாகவும், வீதி வீதியாகவும், மூலைமுடுக்கெல்லாம் சோதனையிட்டனர். வீடுகளில் இருந்த இளைஞர்களைக் கைது செய்து விசாரணைக்கு அழைத்துச்சென்றனர்.

முல்லைத்தீவு மகாவித்தியாலயம், முள்ளியவளை வித்தியானந்த மகாவித்தியாலயம், புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம்ஆகிய மூன்று பாடசாலைகளையும் ராணுவம் பொறுப்பெடுத்து முகாம்

(5-ம் பக்கம் பார்க்க)

வெடிகுண்டு இருப்பதாக அநாமதேய தகவல்—

## கல்முனைப் பகுதியில் திடீர் பரபரப்பு!

(மட்டக்களப்பு)

கல்முனை மக்கள்வங்கிக் கட்டிடத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருப்பதாகக் கிடைத்த அநாமதேய தொலைபேசித் தகவலைத் தொடர்ந்து கல்முனைப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது

மக்கள் வங்கிக் கட்டடத்தின் சகல பகுதிகளும் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டன

(5-ம் பக்கம் பார்க்க)

## சர்வகட்சி மாநாடு செய்திகள்

(கொழும்பு)

சர்வகட்சிமாநாடு சம்பந்தமாக, உத்தியோகபூர்வமான அறிக்கையைத்தவிரவேறுசெய்திகளைப் பிரசுரிக்கவேண்டாம் என்று பத்திரிகை ஆசிரியர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

ராஜாங்க அமைச்சின் செயலாளா திரு பி.ஐ. குணதுங்க நேற்றுக்கூட்டிய பத்திரிகை ஆசிரி

(5ம் பக்கம் பார்க்க)

## லலித் 'தமிழில்' பேசினார்

(கொழும்பு)

தேசியபந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி நேற்று தனது அமைச்சின் அலுவலகத்தில் நடைபெற்ற வைபவமொன்றில்

(5ம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரி சிற்றூழியர் இன்றுவரை காலக்கெடு!

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் சுமார் 600சிற்றூழியர்கள் ரொக்கப்பணமாகத் தங்களுக்கு சம்பளம் வழங்க வேண்டுமென்றகோரிக்கையைமுன்வைத்து, வெளிநடப்புச் செய்வதற்கு இன்று நண்பகல் 12மணிவரை காலக்கெடுவிடுத்துள்ளனர்.

ஆஸ்பத்திரி நலன் காக்கும் தலைவரும், சிறிலங்கா மக்கள் குடியரசு சுகாதார சேவை தொழிலாளர் சங்கத்தின் பிரதிநிதியுமான திரு யோ. இம்மனுவேல் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

## வல்வை இளைஞர் இருவர் கைது

(கொழும்பு)

போலிக் கடவுச் சீட்டுகள் வைத்திருந்தனர் என்ற சந்தேகத்தின் மீது இருவர் கட்டு

(8ம் பக்கம் பார்க்க)

## கிறிஸ்மஸ் தினம் மதுவிலக்கு!

(கொழும்பு)

நத்தார் தினத்தன்று மதுபானக் கடைகளை மூடிவிடுவதென்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

கொழும்பு மேற்றிராணியார் அதி. வண. ஒஸ்மன்ட் கோமஸ் விடுத்த வேண்டுகோளை ஆராய்ந்த அமைச்சரவை நேற்று இந்த முடிவை எடுத்தது.

கத்தோலிக்க திருச்சபை அரசாங்கத்திடம் இவ்வாறான வேண்டுகோள் விடுத்தது இதுவே முதல்தடவை என்று கூறப்படுகிறது.

## "பொலிஸ்நிலையம், அதிரடிப்பிரிவை இடம் மாற்றவும்"

### வடமராட்சிப் பெற்றோர் ஜனாதிபதிக்கு மகஜர்

(புலோலி)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கும், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரிக்கும் அருகாமையில் பருத்தித்துறை பொலிஸ் நிலையமும், அதிரடிப்படைப் பிரிவும் இருப்பதனால் இக்கல்லூரிகளுக்கு மாணவர்களை அனுப்பமுடியாமல் இருப்பதாகவும் எனவே பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தையும், அதிரடிப்படைப்பிரிவையும் இடம் மாற்றி மாணவர்களுக்குப் பாதுகாப்பளிக்கவேண்டுமெனக்கேரி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரிகளின் மாணவ, மாணவிகளின் சுமார் 2500 பெற்றோர்கள் கைச்சாத்திட்டு ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனவுக்கு மகஜரொன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

இப்பெற்றோர்களால் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

''கடந்த 1-9-84 அன்று பருத்தித்துறைநகரத்திலிருந்து சுமார் மூன்று மைல் தூரத்திலுள்ள திக்கம் என்னுமிடத்

(5-ம் பக்கம் பார்க்க)

## யாழ். இந்துவிலிருந்து 60 மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி

### பொறியல்துறைக்கு அதிக மாணவர் தெரிவு!

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரியில் இருந்துமொத்தம் அறுபது மாணவர்கள் இம்முறை பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ளனர்.

கல்லூரியின் நீண்ட மரபுக்கு ஏற்ப இம்முறையும் பொறியியல் துறைக்கே அதிகமான மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள் யாழ். மாவட்டத்தில் அதிகப்படியான மாணவர்கள் இம்முறையும் யாழ் இந்துக் கல்லூரியில் இருந்தே தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட அறுபது

(5-ம் பக்கம் பார்க்க)

## வெனியாவில் 'வேட்டை'

(வவனியா)

தீவிரவாதிகளைத் தேடி வவனியாவில் ஆயுதப்படையினர் மன்னார் வீதியிலுள்ள குருமணகாடு, காப்பைக் காடு, பகுதிகளில் திடீர் முற்றுகையிட்டனர்

இப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் பலரும் கடும் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

ஒன்பது இளைஞர்கள் மேல் விசாரணைக்காக ஈரப்பெரியகுளம் இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

## ராணுவம் வெளியேறியது!

(அமிர்தஸரஸ்

பஞ்சாப்பிலுள்ள சீக்கியர்களின் புனித தலமான பொற்கோவிலில் கடந்த மூன்று மாதமாக நிலைகொண்டிருந்த இராணுவம் நேற்று வெளி

(5-ம் பக்கம் பார்க்க)

## மின்னேரியா—46 பேர் குண்டசாலை—42 பேர்

(கொழும்பு)

மின்னேரிய, குண்டசாலை ஆகிய தொகுதிகளில் நடைபெறவுள்ள இடைத்தேர்தலில் போட்டியிடுவதற்கு நேற்று

(5ம் பக்கம் பார்க்க)

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

Cross Broilers ஒருநாள் 4/50, ஒரு கிழமைக் குஞ்சு6/-, சேவல்குஞ்சு 1/90, Broilers 9/25. ராதா கிருஷ்ணுஸ், 392, நாவலர் வீதி, கயிலாச பிள்ளையார் கோவிலடி. 1884

வோக்ஸ்வகன் 12 வோல்ற் பாவித்த டைனமோ Complete மோட்டர், Wiper மோட்டர் விற்பனைக்கு அல்லது 6வோல்ற் றுக்குமாற்ற. தொடர்பு:71/16 இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம். 1938

33ஸ்ரீ கொமர் வான் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆறுகால் மடம் முன்பாக ஆனைக்கோட்டை. 1977

84 ஸ்ரீ தொடரிலக்கம் கொண்ட புதிய மொடல் சிவப்புநிற ஹொண்டா C 90 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு விபரங்கட்கு: குலசிங்கம், அம்மன் கோவிலடி, கலவியங்காடு, யாழ்ப்பாணம். 1967

புத்தம்புதிய Belling Cooker 4 Burners, Oven, Grill உடையது விற்பனைக்கு அல்லது கார், கலர் T V, வீடியோ டெக் உடன் பகுதி மாற்றத்திற்கு. சொனிக் வீடியோ சென்ரர், சந்தைக்கு அண்மையில் மானிப்பாய். 1958

ஆனைக்கோட்டை முன்னுள் பொலிஸ்நிலைய முன்னுலுள்ள ஆலையடிக் காணியிலிருந்து பிரமூன்றுவது காணி 4பரப்பு விற்பனைக்குண்டு. தொடர்புக்கு: அருட்திரு வீ. ஜே. சீவரத்தினம், மெதொடித்த தேவாலயம், ஈவினை 1960

முல்லைத்தீவில் P. W. D. ரோட்டில் இருக்கும் நல்ல நிலையில் உள்ள சகல வசதிகளையும், ஐந்து அறைகளையும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. 5-10- 84 க்கு முதல் தொடர்பு கொள்ளவும், தொடர்பு: சூ. அருளானந்தம், 874, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1959

நஷனல் NR-195 TZC குளிர் சாதனப்பெட்டி, நீளம் 20'' உயரம் 44'' புதியது ஒற்றைக் கதவு உடன் விற்பனைக்குண்டு. இம்மாதம் 29ம், 30ந் திகதிகளில் பார்வையிடலாம் எம். நமசிவாயம் சேர்ச் லேன், மல்வம் உடுவில்; 1976

திருநெல்வேலி கிழக்கு ராமலிங்கம் வீதியில் 3½பரப்புக் காணியும், 1800 சதுர அடி வீடும் சாவகச்சேரி தேவாலய வீதியில் 5½ பரப்புக் காணி துண்டுகளாக பிரித்தும் கொடுக்கப்படும். மானிப்பாய் சங்கரப்பிள்ளை வீதியில் வீட்டுடன் 8பரப்புக்காணி மானிப்பாய் சங்கரப்பிள்ளை வீதியில் 4 பரப்புக் காணி யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் துண்டி வீதியில் 3 பரப்புக் காணி காங்கேசன்துறை பட்டின சபை எல்லைக்குள் சுற்றுமதில், மலகூடம், கிணறுடன் கூடிய 5 அறை கொண்ட பூர்த்திசெய்யாத நிலைமட்ட வீட்டுடன் 4 பரப்புக் காணி. தொடர்புகொள்ளவும் குயிக்ஸ் என்ரபிறைசஸ் 533, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1957

## தேவை

ஆர்.வி.ஜி. பீடி தயாரித்துத் தரக்கூடிய ஆண், பெண் இருபாலரும் விரும்பத்தக்கது. விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும் நிர்வாகம், ஆர். வி.ஜி.பீடி, ஸ்தாபனம், 275, பீச்ரோட், யாழ்ப்பாணம். 1941

## குத்தகைக்கு

யாழ்ப்பாணத்தில் பலவித பொருட்களும் துரித விற்பனையாகிக் கொண்டிருக்கும் கடை குத்தகைக்கு கொடுக்க இருக்கிறது. விபரங்களுக்கு: 104/1 அத்தியடி குறுக்கு வீதி, பிள்ளையார் கோயில் முன்பாக யாழ்ப்பாணம். 1956

## பயிற்சிகள்

ரெலிவிசன், வீடியோடெக் றிடபியறிங், Computer Programming எலக்ரிக்கல் வயறிங், றீவைண்டிங், Hotel management, French, German பயிற்சிகள் இரண்டு மாத செய்முறைப் பயிற்சி உட்பட நடைபெறுகின்றன. ஆரம்பம்: 05-10-84. Jaffna Technical Institute ஸ்ரான்லி வீதி (றெயில்வே கடவையருகாமை) யாழ்ப்பாணம் 1974

## தவறிவிட்டது

எனது அடையாள அட்டை (இல 55117 190் V) செல்வராஜலிங்கம் சந்திரபாலன், உரும்பிராய் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து எஞ்ஜினியரிங் கொன்சல்ரன்ஸ், 182½ ஸ்ரான்லி ரோட். யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும். 1975

## கேள்விப் பத்திரம் வெற்றுச் சாக்கு விற்பனவு

தெல்லிப்பளை ப. நோ. கூ சங்கத்தில் 10,000 வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திர மூலம்விற்பனைக்குண்டு.ரூ500/- வைப்புபணமாகதலைமைக்காரியாலயத்தில் செலுத்தி கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரம் 12-10-84 செவ்வாய்க் கிழமை பி. ப 4 மணிக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் பொதுமுகாமையாளர், ப. நோ. கூ. சங்கம், தெல்லிப்பளை என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மூலையில் 'வெற்றுச் சாக்குகளுக்கான கேள்விப் பத்திரம்' எனக்குறிப்பிடல் வேண்டும். கேள்விப் பத்திரம் 02-10-84 செவ்வாய்க் கிழமை பி. ப 4மணிக்கு சங்க உபசபையினர் முன்னிலையில் திறக்கப்படும்.

பதில்பொதுமுகாமையாளர்
தெல்லிப்பளை ப. நோ.கூ சங்கம்
தெல்லிப்பளை
84-09-25 1955

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



லண்டனைச் சேர்ந்த தெய். இந்திரகுமார் கலைவாணி தம்பதிகளின் செல்வப் புதல்வி வித்யா தனது முதலாவது பிறந்த தினத்தை 27-9-84ல் 128. ரேலன் ரோட், லண்டன் W14-இல் குதூகலமாகக் கொண்டாடுகிருர். இவரை இவரது டடா, மமா, அப்பப்பா, அம்மப்பா. அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்திமார், சித்தப்பாமார், பாட்டி, பேத்தி, பேரன்மார், மாமன்மார் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் சீரும் சிறப்பும் உயர்கல்வியும்பெற்று நீடூழி வாழ வாழ்த்துகிருர்கள். 1970

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

பண்டத்தரிப்பு என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை முத்துக்குமாரு என்பவரின் மரணசாதன மற்ற மரணச்சொத்துக்களின் விடயத்தில்,

—மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் } இல/ரி. 203

கணபதிப்பிள்ளை முத்துக்குமாரு கைம்பெண் யசோதராதேவி. இந்துக் கல்லூரி வீதி, பண்டத்தரிப்பு

—எதிராக மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 19:4ம் ஆண்டு ஐப்பசி மாதம் (10-10-1984) 10-ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்ருக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1984-ம் ஆண்டு வைகாசி மாதம் 25ம் திகதி.


நீதிமன்றக் கட்டளைப்படி
ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்

வரைவு:
க.குணரத்தினம்
மனுதாரின் சட்டத்தரணி
1964

## நன்றி நவிலல்

''அப்பாவி பாபுவின் உயிர் பறிப்பு''
சொர்ணலிங்கம் ஏகதயாபரன்
(பாபு)

பிறப்பு: 1956-4-9 உயிர் பறிப்பு: 1984-9-11



11-9-1984இல் வவனியாவில் வைத்து படுகொலை செய்யப்பட்ட எமது குல விளக்கின் தகனக்கிரியையில் நேரில் கலந்து கொண்டும், அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும் குறிப்பாக வவனியா மாவட்ட வைத்திய அதிகாரி திரு. நிரஞ்சன், பதில் நீதவான் ஆர். வி. விஷ்வராஜா ஆகியோருக்கும் எமது குல விளக்கினை வவனியாவிலிருந்து நயினுதீவு கொண்டுவருவதற்கு உதவிய ஆ. தியாகராஜா, சி. சண்முகநாதன், க. இரத்தினசிங்கம் ஆகியோருக்கும், படகு உதவிய ச. பரஞ்சோதிக்கும் மேலும் இது விடயத்தில் உதவிய சகலருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்ருேம்.

தந்தை வை. சொர்ணலிங்கம்
சகோதரர்கள் திவாகரன், பகீரதன்.

'வைகுந்தம்', 3-ம் வட்டாரம்,
நயினுதீவு. 1969

★ Nursing Aides

புதிய பிரிவு ஆரம்பம்: 06-10-84
கட்டணம்: 1750/-
காலம்: 6 மாதம்

வெளிநாட்டில் வேலைவாய்ப்பு பெற விரும்புவோருக்கு மிகச் சிறந்த பயிற்சி நெறி.

★ Computer Programming —Basic

புலமைப்பரிசில் பெற்றவர்கள் இம்மாத முடிவிற்குள் உங்கள் பெயர்களை பதிவு செய்யவும். ஏனையவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

★ I. A. B.—Final

★ Hotel Management

கட்டணம்: 950/-
காலம்: 3 மாதம்

தொடர்பு:

**Comteck Institute**

No. 14, St. PETERS LANE,
(ஆஸ்பத்திரி வீதி, 3-ம் குறுக்குத்தெரு சந்தி)
JAFFNA. T-Phone: 24355.

## கேள்விப்பத்திர அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட
அபிவிருத்திச்சபை உப அலுவலகம்
மானிப்பாய் பட்டினம் மானிப்பாய்

உள்ளூராட்சி மன்றங்களில் அரசாங்கத் திணைக்களங்களில் அல்லது கூட்டுத்தாபனங்களில் ரூபா 50,000/- அல்லது அதற்குக் கூடிய வேலைகளுக்காகப் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ் காணும் வேலைக்கான முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் யாவும் 1984-10-22ஆந் திகதி நண்பகல் 12-00 மணிவரை பிரதிச் செயலாளர் (நிர். சட். வேலை) யாழ். அபிவிருத்திச்சபை த. பெ. இல. 9 யாழ்ப்பாணம் என விலாசமிட்டு அனுப்பப்படுதல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்களை இவ்வலுவலகத்தில் 1984-10-15ஆந் திகதி நண்பகல் 12-00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் பதிவஞ்சல்மூலமாக அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். கேள்விப்பத்திரங்களை அனுப்பப்படும் உறைகளில் இடதுபக்க மேல் மூலையில் ''யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச்சபை, மானிப்பாய் பட்டின உப அலுவலக், நூல் நிலையக் கட்டிட திருத்த வேலை'' எனக் குறிப்பிடவேண்டும். ஏனைய விபரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்

| வேலை விபரம் | கேள்விப்பத்திர வைப்புப்பணம் | கேள்விப்பத்திரக் கட்டணம் |
|---|---|---|
| யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபை உப அலுவலகம், மானிப்பாய் பட்டினம், மானிப்பாய் நூல்நிலையக் கட்டிடத் திருத்தவேலை | 500/- | 100/- |

க. இராஜசுந்தரம்
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்
யா. அ. ச. உப அலுவலகம், மானிப்பாய்.

யா. அ. ச. உப அலுவலகம்,
மானிப்பாய் பட்டினம்.
24-9-84. 1961

# "சோவியத் — அமெரிக்க உறவிலேயே உலகின் எதிர்காலம் ஊசலாடுகிறது!

## சோவியத் எழுத்தாளர்மத்தியில் அதிபர் சேர்நென்கோ உரை!

மாஸ்கோ, செப். 26

"சோவியத் – அமெரிக்க உறவிலேயே உலகின் எதிர்காலம் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது" என்று சோவியத் அதிபர் திரு. கொன்ஸ்ரையன்ரின் சேர்நென்கோ தெரிவித்தார்.

திரு. சேர்நென்கோ நேற்று முன்தினம் மாஸ்கோவில் சோவியத் எழுத்தாளர்கள் மத்தியில் உரையாற்றினார். அப்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு சேர்நென்கோ தொடர்ந்து கூறியதாவது:-

"இராணுவத் துறையில் அமெரிக்கா மீது எதிர்ப்புக் கொள்கையைக் கொண்டிருக்க சோவியத்யூனியன் விரும்பவில்லை.

அணுஆயுத உற்பத்தி அதிகரிப்பினால் உலகம் மிகவும் பீதி கொண்டுள்ளது. எனவே அமெரிக்காவும், சோவியத் யூனியனும் இவ்வுற்பத்தியைக் குறைக்க முன்வரவேண்டும். ஆயுதப் போட்டி, இராணுவ அச்சுறுத்தல் அற்ற உறவையே அமெரிக்காவிடமிருந்து சோவியத் யூனியன் எதிர்பார்க்கின்றது.

அமெரிக்கத் தலைமைப்பீடம் சோவியத் யூனியனுடன் சுமுகமான உறவுவைத்திருப்பதைத் தவிர்த்துவருகின்றது. சோவியத்-அமெரிக்க உறவைச் சகஜ நிலைப்படுத்திக் கொள்வதைத் தவிர உலக பாதுகாப்புக்கு மாற்றுவழி எதுவும் கிடையாது. இவ்விரு நாடுகளினதும் உறவிலேயே உலகின் எதிர்காலம் ஊசலாடிக்கொண்டிருக்கின்றது.

சமத்துவம், உலகநாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடாமை போன்றவற்றின் அடிப்படையில் சோவியத்-அமெரிக்க உறவு விளங்க வேண்டும்" என்றும் அதிபர் சேர்நென்கோ வலியுறுத்தினார்.

திரு சேர்நன்கோவின் இவ்வுரை அமெரிக்க அதிபர் நியூயோர்க்கில் ஐ.நா. கூட்டத்தொடரில் நிகழ்த்திய உரைக்குப பதிலளிப்பதாக அமைந்ததென்று கொள்ளக்கூடாது என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. [கி]

## 'டிபரன்ற் ஸ்டிரோக்ஸ்' சித்திரத்தில் திருமதிறீகன்!

(கொழும்பு)

'டிபரன் ஸ்டிரோக்ஸ்' என்ற தொலைக்காட்சி நகைச்சுவைச் சித்திரத்தில் அமெரிக்க ஜனாதிபதியின் பாரியார் திருமதி நான்ஸி றீகனும் கௌரவ நடிகையாகத் தோன்றி சுமார் 10நிமிடங்கள் வரை நடித்தார்.

திருமதி றீகன் நடித்த 'டிபரன்ற் ஸ்டிரோக்ஸ்' நகைச்சுவைச் சித்திரத் தொடர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இலங்கை ரூபவாஹினியிலும் இரவு 9 மணிமுதல் 9-30 வரை இடம்பெற்றது.

திருமதி. நான்ஸி றீகன் இத்தொலைக்காட்சி சித்திரத்தில் 'ஆர்னல்ட்' என்ற பாத்திரத்தில் நடிக்கும் கறுப்புக் குள்ளச் சிறுவனின் குடும்பவிருந்தினராகத் தோன்றினார்

பின்னர் அவர் அச்சிறுவனின் வகுப்பறையில் போதைவஸ்த்துப் பாவனைக்கு எதிராக சிறுவர்கள் மத்தியில் அறிவுரைகளை வழங்கினார். திருமதி றீகன், அமெரிக்க ஜனாதிபதியின் பாரியாராகவே வேறுபட்ட பாத்திரமின்றி நடித்தார். அவரது இக்கௌரவ நடிப்பின் முக்கிய நோக்கம் போதைவஸ்த்துப் பாவனைக்கு எதிரான பிரசாரமே. (கி)

## பஞ்சாப் பொற்கோயிலில் இருந்து இராணுவம் வெளியேறும்!

### பிரதமர் இந்திரா அறிவிப்பு

புதுடில்லி, செப். 26

பஞ்சாப் பொற்கோவிலிலிருந்து இராணுவத் துருப்புகளை விலக்கிக்கொள்வதற்கு மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

நேற்று மாலை வானொலியில் உரையாற்றுகையில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அந்த உரையில் குறிப்பிட்டதாவது:-

"பொற்கோயிலை தவறுகப் பயன்படுத்துவதில்லையென்றும், அங்கு பயங்கர ஆயுதங்களை வைப்பதற்கு இடமளிப்பதில்லையென்றும் சீக்கிய உயர் மத குருமார் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளனர். இதனை அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டு இந்த முடிவை மேற்கொண்டுள்ளது. தற்போது கோயிலில் இராணுவம் படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருகிறது. ஆயினும் சந்தேகத்துக்கிடமான ஒரு சில பகுதிகளில்தான் இராணுவம் தற்போது நிலைகொண்டுள்ளது. பொற்கோயிலுக்குத் தேவையான ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டவுடன் இராணுவம் அங்கிருந்து வெளியேறிவிடும்.

அதன் பின்னர் பக்தர்கள் கோயிலுக்குச் செல்வதற்கு எந்தவிதத் தடையும் இருக்காது" என்றார்.

"பிரிவினைவாதம், நாட்டின் தேசியத்துக்கு எதிரான சில வகுப்புவாத சக்திகள் நாட்டில் ஒற்றுமையைக் குலைக்க முயல்கின்றார்கள். இந்தச் சக்திகளை மக்கள் எதிர்க்கவேண்டும்" என்றார்.

"பொற்கோயிலிலிருந்து இராணுவம் வெளியேற்றப் படுவதினால் சீக்கிய மக்கள் ஒற்றுமையான, சுமுகமான வாழ்வுக்கு இட்டுச்செல்லப்படுவார்கள்" என்றும் அவர் தெரிவித்தார்.

பொற்கோயிலிலிருந்து இராணுவம் வெளியேற்றப்படும் என்ற பிரதமர் இந்திராகாந்தியின் அறிவிப்பைத் தொடர்ந்து ஐந்து சீக்கியக் குருமார் பொற்கோயிலில் நேற்றுக் கூடி ஆராய்ந்தனர்.

ஆயினும் இராணுவம் வெளியேறும் திகதியை இந்திரா காந்தி இதுவரை அறிவிக்கவில்லை. (சூ)

## தமிழக கரையிலும், கடலிலும் ஏற்பட்ட அனுபவம்

# தமிழ் தீவிரவாத இளைஞர்களுடன் இரு இந்தியப் பத்திரிகையாளர்!

இந்தியப் பத்திரிகையாளர்கள்இருவர் தமிழ்தீவிரவாதிகள் குழு வினருடன் சட்ட விரோதமாகபாக்கு நீரிணையைக் கடந்து இலங்கை மண்ணில் காலடி வைக்க எண்ணம் கொண்டனர்.

அந்த அனுபவத்தை சுவையுடன், விறுவிறுப்பாக எழுத விரும்பினர்.

கால் வைக்கும் முயற்சி கைகூடவில்லை என்றாலும் இந்தியக் கரையிலும் கடலிலும் கண்ட அனுபவம் அவர்களுக்குப் பெரிதாக இருக்கிறது. தமது அனுபவத்தை இரு இந்தியப் பத்திரிகையாளர்களும் இங்குகூறுகிறார்கள். இருவரின் பெயர்கள்; திரு கஜல்பாஸு, திரு சதானந்த் மேனன். கட்டுரை வந்த சஞ்சிகை; சண்டே ஒப்ஸேவர் (இந்தியா)

தமிழ்நாட்டில் வேதாரணியம் கிராமத்தில் 'ஈ. பி ஆர். எல். எவ்' என்ற ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் 'பாதுகாப்பு இல்லத்தை' ஆகஸ்ட் 25-ம் திகதி மாலை மூன்று மணிக்கு சென்றடைந்தோம்,

குளிர்ச்சியான, பழைய அமைப்பிலான அந்தக் கட்டிடத்தில், இருபத்தைந்து இலங்கைத் தமிழ் இளைஞர்கள் அப்போது அங்கிருந்தார்கள்.

கல்லூரி விடுதியைப்போன்ற ஒரு உணர்வை அவர்கள் ஏற்படுத்தினார்கள். சமையல்செய்பவர்கள், இடத்தைத் துப்புரவு செய்வோர், இன்னொரு பாதுகாப்பு இல்லத்துக்குச் செய்திகளை எடுத்துச் செல்வோர் இப்படி வகை வகையாக வேலைகளைப் பிரித்துச் செய்துகொண்டிருந்தார்கள்.

இன்னொரு மிக முக்கியமான வேலையைச் சில இளைஞர்கள் செய்து கொண்டிருந்தார்கள்.

வேதாரணியம் கடற்கரையில், குறிப்பிட்ட சில படகுகளின் வருகையை உற்றுநோக்கிக் கொண்டிருந்தனர்.

அந்தப்படகுகள்-

இலங்கையின் வடக்குக்கரை நோக்கி, 'கெரில்லாக்களை' ஏற்றிக்கொண்டு செல்லும் அதிமுக்கிய போக்குவரத்து சாதனம் என்று குறிப்பிடலாம்.

வேதாரணியம் கடற்கரையிலிருந்து வாரத்தில் இரண்டோ, மூன்று தடவை வடக்குக் கரைநோக்கிச் செல்லும் இந்தப்படகுகள், சுமார் பதினெட்டு வீரர்களைச் சுமந்து செல்லுகின்றன.

இவர்கள் லூங்கிகள், சாரங்கள் அணிந்த திடகாத்திரமான, நான்கு பயிற்றப்பட்ட தமிழ் இளைஞர்கள்.

இருபத்தைந்து அடி நீளமான இலங்கை-நோர்வே கூட்டுத்தயாரிப்பில் உற்பத்தியான இப்படகுகள், இப்போது வீரர்களை ஏற்றிச்செல்லும் 'கெரில்லாப் படகுகளாக' மாறியுள்ளன.

இலங்கை இந்தியக் கடல்களில் அலைகளைக் கிழித்துச் செல்லும் அதிவேகமான படகுகளாக இவை இப்போது மாறிவிட்டன!

யாழ்ப்பாணத்துக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை நேரில் கண்டறிந்து வரவேண்டுமென்ற ஆர்வத்தோடு பத்திரிகைப் படப்பிடிப்பாளர் திரு. மேனனும், நானும் புறப்பட்டோம்

சென்னையிலிருந்து வேதாரணியத்துக்குப் பஸ்ஸில் கும்பகோணம் ஊடாகச் சென்றோம்.

இலங்கைத் தமிழர்கள் தங்களைப் பகிரங்கமாக வெளிப்படுத்தமாட்டார்கள்! இந்தியத் தமிழ் மலையாளம் இணைந்தது இலங்கைத் தமிழ்!

கும்பகோணத்துக்குச் செல்லும்போது, கண்டக்டர் இலங்கையின் பிரபல கவிஞரான செங்கனலிடம் கேட்டார்: "டிக்கட் இருக்கிறதா?" செங்கனல் பதில்சொன்னார் "ஓம்" "ஆமா" என்ற இந்திய பாஷையில் இல்லாது தமது நாட்டுவழக்கில் "ஓ" என்னு சொல்லதிலிருந்து தம்மை யார் என்று வெளிப்படுத்திவிட்டார்! அந்தக் கவிஞரிடம் இரண்டு உணர்ச்சிக் கவிதைத் தொகுதிகள் இருந்தன.

வேதாரணியம் கடற்கரை மிகச் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது

நீளமான, அழகான அந்தக் கடற்கரையில் இருநூறு யார் வித்தியாசத்தில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் 'இறங்குதுறையும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் இறங்குதுறையும் அமைந்து இருக்கின்றன. இன்னொருபக்கத்தில் ரெலோ என்ற தமிழ்ஈழ விடுதலை இயக்கத்தின் இறங்குதுறையும் இருக்கின்றது.

மாலை 4 மணி

மீன்பிடிக்கும் தமிழக மீனவ இளைஞர்கள் அங்கு நின்று கொண்டிருந்தார்கள்.

கெரில்லா வீரர்கள் அங்கு வருவதைக் கண்ட மீனவ இளைஞர்கள் படகுகளை நோக்கிஓடுகிறார்கள்.

(7-ம் பக்கம் பார்க்க)


## ஹோம் பிறன்ஸ் லிமிட்

யாழ்ப்பாணம் / கொழும்பு / யாழ்ப்பாணம்

மீண்டும்

### 'பகல் பஸ் சேவை'

**ஆரம்பம் 28/9/84 முதல் (வெள்ளி)**

புறப்படும் இடம் : கன்னாதிட்டி சந்தி.
புறப்படும் நேரம் : 7-30 மணி

**யாழ்ப்பாணத்தில் டிக்கட் பதிவு செய்யுமிடங்கள் :**

1. ஹோம் பிறன்ஸ் லிமிட், கன்னாதிட்டி. தொலைபேசி : 24310
2. நியூ லங்கா சேல்ஸ் சென்ரர். ஆஸ்பத்திரி வீதி தொலைபேசி : 23596
3. நியூ ப்ரசீதா, ஆஸ்பத்திரி வீதி. தொலைபேசி : 22480
4. (1-10-84 முதல்) அன்னராஜா ஸ்ரோர்ஸ், ஆஸ்பத்திரி வீதி. தொலைபேசி : 22608

**கொழும்பில் :**

1. ஹோம் பிறன்ஸ் லிமிட், பம்பலப்பிட்டி. தொலைபேசி : 58٥190
2. டையமன் ஸ்ரோர்ஸ், வெள்ளவத்தை தொலைபேசி : 82978

புறப்படும் நேரம் : 7-00 மணி

பி குறிப்பு : போதிய பாதுகாப்பு இன்மையால் இரவு பஸ்சேவை இரத்துச் செய்யப் பட்டுள்ளது.

### மணிவாக்கு

பெருந்தன்மையுள்ள எந்தப் பணியும் அடக்கத்துடனும், இயல்பாகவும், ஆடம்பரம் இன்றியும் செய்யப்படும்.

—கூப்பர்

## நமது நோக்கு

# சீன - இந்திய நல்லுறவு

வரும் வெள்ளிக்கிழமை அமெரிக்க ஜனாதிபதி றெனல்ட் றீகன் சோவியத் வெளிநாட்டமைச்சர் அந்ரே குரோமிக்கோவைச் சந்தித்துப் பேசவிருக்கும் நிகழ்ச்சி உலக அரங்கில் பெரும் ஆவலுடன் எதிர் பார்க்கப்படுகின்றது. பல மாதங்களின் பின்னர் இரு பெரும் வல்லரசுகளுக்கிடையில் நேரடித் தொடர்பு ஏற்படுவதற்கான முதற் சந்தர்ப்பமாக இது இருப்பது மட்டுமல்ல; தடைபட்டுப் போன ஆயுதக் குறைப்புப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகவும், உலக அமைதியை உறுதிப்படுத்தவும் இப்பேச்சுக்கள் ஊன்றுகோலாக அமையலாம் என்று கருதப்படுவதே இந்த ஆவலுக்குக் காரணம் எனலாம்.

அமெரிக்க அதிபரையும், அவரது குடியரசுக் கட்சியையும் பொறுத்தளவில், இந்தச் சந்திப்பு ஒரு தேர்தல் 'குண்டு' என்றே கொள்ள வேண்டும். ஏனென்றால், சோவியத் அதிகாரிகளுடன் பேச மறுத்து வருவதின் மூலம் வல்லரசு உறவுகளை மோசமாக்கிவிட்டாரென்று றீகன்மீது எதிர்க் கட்சிகள் சுமத்திவரும் குற்றச்சாட்டினை மழுங்கடிப்பதற்கு இது உதவுமென்று அவர்கள் கருதுகிறார்கள். எதுவானலும் அபாயகரமான ஆயுதங்களை உற்பத்திசெய்வதிலும், அவ்வாயுதங்களை உற்பத்தி செய்ய த நாடுகளைப் பயமுறுத்துவதிலும் ஈடுபட்டுள்ள மேலாதிக்க நாடுகளின் கெடுபிடிகள் ஓரளவுக்காகுதல் ஓய்வதற்கு இந் நேரடிப் பேச்சுக்கள் உதவி புரியமுடியும் - நீடித்த உலக அமைதிக்கும் அவை வழி கோலலாம்.

இதைவிட, உலக அமைதிக்குப் பல வகையிலும் உதவக்கூடிய-குறிப்பாக ஆசிய நாடுகள் மகிழ்ச்சியுடன் வரவேற்கக்கூடிய சந்திப்பு ஒன்று பேய்ஜிங்கில் நடந்து முடிந்துள்ளது.

மேற்கத்திய செய்தித் துறையினருக்கு இச்சந்திப்பு அவ்வளவு பெரிதாகத் தெரியாவிட்டாலும் இப் பகுதியிலுள்ள நாடுகளுக்கு இச்சந்திப்பு நல்லதொரு எதிர்காலத்துக்கான நம்பிக்கையை ஊட்டுவதாகும்.

பேய்ஜிங்கில் நடந்துமுடிந்துள்ள சீன - இந்திய தூதுக் குழுக்களுக்கிடையில் ஐந்தாவது சுற்றுச் சமரசப் பேச்சுவார்த்தைகளையே இங்கு குறிப்பிடுகின்றோம்.

இந்தப் பேச்சுக்களில் சீன தரப்புத் தூதுக் குழுவுக்குத் தலைமை வகித்த சீன உதவிப் பிரதமர் திரு. வான் லி வெளியிட்டுள்ள சில கருத்துக்கள் சீன - இந்திய உறவுகள் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பக்கூடிய சாத்தியங்கள் இருப்பதை எடுத்துக் காட்டுகின்றன.

ஆசியாவின் இரு பெரும் நாடுகளுக்கிடையிலான நீண்டகால நல்லுறவின் வரலாற்றைப் பார்க்கையில் அவைகளுக்கிடையில் தகராறுகள் ஏற்படுவதற்கான காரணமே இருக்கமுடியாது என்று தெரிவித்துள்ள திரு. லி, இப்பொழுது இரு நாடுகளுக்குமிடையில் எல்லைப் பிரச்னை ஒன்றுதான் இருக்கின்றது; இதுவும்கூட இரு தரப்பிலும் நேர்மையோடும் நட்புறவோடும் அணுகப்படுமானல் தீர்க்கப்பட்டு விடலாம் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்தியத் தரப்புக்குத் தலைமை வகித்த திரு. நட்வர்சிங், திரு. லியின் கருத்துக்குப் பதிலளித்தபோது, இப்போதைய பேச்சுக்களில் தாங்கள் திருப்தியடைந்துள்ளதாகவும், அடுத்த சுற்றுப் பேச்சுக்கள் அடிப்படையான பிரச்னைகள்பற்றியதாகவிருக்குமென்றும் குறிப்பிட்டதுடன், நியாயமான தீர்வொன்று விரைவாக எட்டப்படுமெனத் தாங்களும் எதிர்பார்ப்பதாக நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இப்பேச்சுக்களின் ஆரம்பக் கட்டத்தில் திரு. லி பேசியபோது, இரு நாடுகளுக்குமிடையில் எல்லைத் தகராறு ஏற்படுவதற்கு முன்பிருந்த நிலைமை மீண்டும் ஏற்பட வேண்டும் என்ற விருப்பத்தை வெளியிட்டார்

இந்தப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக இந்தியப் பத்திரிகைகளும்கூடப் பெரிதாக ஒன்றும் அலட்டிக் கொள்ளாதுபோனாலும் ஆசியாவின் எதிர்காலத்துக்கு, இவ்விரு நாடுகளுக்குமிடையில் உறவும், ஒத்துழைப்பும் நிலவுவது அவசியமென்பதை நாம் பல தடவைகளிலும் வற்புறுத்தி வந்துள்ளோம்.

இந்து சமுத்திரப் பிராந்தியம் வல்லரசு கெடுபிடிகளிலிருந்து விடுபடவும் வல்லரசு முகாம்களை நம்பிக் கொண்டும், அவைகளின் முகமூடியைப் போட்டுக் கொண்டும் தகிடுதத்தங்களில் இறங்கியுள்ள இப் பிரதேசத்திலுள்ள சிலநாடுகளின் கொட்டம் அடங்கவும் சீன-இந்தியஉறவும்ஒத்துழைப்பும் வலுவடைவது அவசியமாகின்றது. அதனுல் ஆசியாவின் கடலும் மண்ணும், மக்களும் மாத்திரமல்ல உலக அமைதியும் காப்பாற்றப்பட முடியும்.

எனவே வாஷிங்டனில் குரோமிக்கோ- றீகன் சந்திப்பை விட பேய்ஜிங்கில் நடந்துள்ள இந்திய சீன பேச்சுக்கள் நமக்கு முக்கியமானவை.

அடுத்தச் சுற்றுப் பேச்சுக்கள் எப்போது என்று அறிவிக்கப்படவில்லை. அதுவும் விரைவில் நடந்து ஆசியாவின் இரு பெரும் நாடுகள் மீண்டும் கைகோத்துக்கொண்டு இந்தப் பிரதேசத்தின் கௌரவத்தையும் பெருமையையும் காப்பாற்றும் வகையில் இணையும் காலம் வெகு விரைவில் வர வேண்டும் எனப் பிரார்த்திப்போம்.

# வடக்கின் நோயை இன்னும் அறியாத சிறிமா

## ஆதிக்கப் போட்டியால் அழிவுயாருக்கு

வடக்குப் பயங்கரவாதம் நோயின் அறிகுறியே என்றும் இந்த நோயின் காரணத்தை அறிந்து பரிகாரம் தேடவேண்டுமென்றும் இலங்கையின் முன்னுள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா சமீபத்தில் இங்கு வந்திருந்த 'நியூஸ்வீக்' சஞ்சிகையின் நிருபர் பிராங்க்கிப்னிக்கு அளித்த ஒரு பேட்டியில் தெரிவித்திருந்தார்.

இந்தப் பேட்டியில் இலங்கையின் இனப் பிரச்னைக்கு அரசியல் தீர்வே காணப்பட வேண்டுமென்றும் அவர் கூறியிருக்கிறார்,

ஜனாதிபதி ஜெயவர்த்தன கூட்டிய வட்டமேசை மாநாட்டில் தாம் கலந்து கொள்ளாததற்குக் காரணம் கூறியுள்ள திருமதி பண்டாரநாயகா இந்த நாட்டின் தலைவராக இருக்கும் ஜெயவர்த்தனவே பிரச்னைக்குத் தீர்வுகாணக் கூடிய யோசனையை வெளிப்படையாகத் தெரிவித்து 'இதுதான் எனது ஆலோசனை; நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்' என்று சொல்ல வேண்டும். ஆனல் அவர் எங்களுடைய ஆலோசனைகளைப் பெற எத்தனிக்கிருர் என்றும் திருமதி பண்டாரநாயகா கூறியிருக்கிருர்.

இனப் பிரச்னைக்குத் தீர்வு காண்பது சாத்தியமாகாத விஷயமல்ல என்றுகூறும் திருமதி பண்டாரநாயகா சிங்கள மக்களின் நலனைக் கவனிக்க வேண்டுமென்றும் சிங்கள மக்களைக் குழப்பக் கூடியதாக எவ்வித தீர்வும் காணமுடியாதென்றும் கூறியிருக்கிருர்.

திருமதி சிறிமா பண்டாரநாயகா தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஜனாதிபதி கூட்டிய சர்வகட்சி மாநாட்டில் முதலில் தயக்கம் காட்டிப் பின்னர் சிறிது காலம் கலந்துகொண்டு பின்னர் வாபஸ் பெற்றுக் கொண்டது.

ஆனாலும் இந்த மாநாட்டில் ஜனாதிபதியைப் போன்றே சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் எந்த ஒரு யோசனையையும் முன்வைக்கவில்லை

இலங்கையில் இனப்பிரச்னைக்குச் சுமுகமான நிரந்தரத் தீர்வுக்குள்ள ஒரேவழி பிரதேச சுயாட்சிதான் என்று இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சி மட்டுமே மாநாட்டில்யோசனை தெரிவித்திருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியோ, சிறிலங்கா சுதந்திரக்கட்சியோ, மற்றும் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த கட்சிகளோ யோசனை எதுவும் தெரிவிக்கவில்லை.

**எஸ். எம். ஜி.**

இனப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதைவிட இதைவைத்து அரசியல் ஆதிக்கப்போட்டி நடத்துவதே இரண்டு பெரும் கட்சிகளுக்கிடையில் இதுகாலவரை இருந்துவந்தது. நாட்டை இந்த அளவுக்குப் பேரழிவுக்குக் கொண்டுவந்த பின்னரும்கூட இருகட்சிகளும் கிளித்தட்டு விளையாடிக் கொண்டிருக்கின்றன.

நோயின் காரணத்தை அறிந்து பரிகாரம்தேட நாம் முயற்சிக்க வேண்டும் என்று கூறும் திருமதி சிறிமாவுக்கு இதுகாலவரை இந்த நோய் பற்றித் தெரியாதிருப்பதும் இதற்குப் பரிகாரம் தேடக் கூடிய யோசனையைச் சொல்ல முடியாதிருப்பதும் வேடிக்கைதான்.

வல்வெட்டித்துறையில் கூடிய நான்கு தமிழ்க் கட்சிகளின் மாநாடு தமிழ்மக்களின் குறைந்தபட்சக் கோரிக்கையாக ஆறு அம்சத்திட்டம் ஒன்றைத் தயாரித்து அனுப்பி அது சம்பந்தமாக நேரில்பேச்சுவார்த்தை நடத்தி விளக்கம் அளிக்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்திருந்தது.

ஆறு அம்சத்திட்டம் பற்றி ஆராயவிரும்பாதது மட்டுமல்ல தமிழர் பிரதிநிதிகளைச் சந்திக்கவே திருமதி பண்டாரநாயகா தயாராக இருக்கவில்லை.

1960-ஆம் ஆண்டு ஜூலைத் தேர்தலிலும், 1970-ஆம் ஆண்டுத் தேர்தலிலும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவுக்கு மிகப்பெரும்பான்மைப் பலம் கிடைத்தது. 1972-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட புதிய அரசியலமைப்பிலேயே திருமதி சிறிமாவோ நினைத்திருந்தால் இனப்பிரச்னைக்குத் தீர்வு காண வழி கண்டிருக்கலாம்.

இன்றும் கூடச் சர்வகட்சி மாநாட்டில் சுதந்திரக்கட்சி யோசனை எதையும் முன்வைக்காததால், தாங்கள் முன்வைக்கும் யோசனையை எதிர்த்துத் தமது அரசுக்கு வீழ்ச்சி ஏற்படுத்தச் சுதந்திரக்கட்சி முயற்சி செய்யும் என்ற அச்சம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு.

இப்படி ஒருசந்தர்ப்பத்தையே சுதந்திரக்கட்சியும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறதென்பதும் தெளிவு.

இனப் பிரச்னைக்கு உண்மையிலேயே அரசியல் தீர்வு காண வேண்டுமென்பதில் ஐக்கிய தேசியக்கட்சி அரசு தவிர்ந்த அரசியல் கட்சிகளுக்கு அக்கறையிருக்குமானல் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதேச சுயாட்சி யோசனையை ஆதரிக்க முன்வரலாம் அல்லது தேர்தலில் கூட்டுச்சேருவது போல் இந்தத் தேசியப் பிரச்னையிலும் இக்கட்சிகள் கூட்டாக ஒருயோசனையை முன்வைக்கலாம்.

அரசியல் ஆதிக்கப்போட்டி நாட்டில் தமிழ்மக்களை மட்டுமல்ல முழுநாட்டுக்குமே ஆபத்தாக முடியும் என்பதையும் "இன்னொரு கலகம் வந்தால் சிங்களப் பௌத்தர்களுக்கே பேரழிவு ஏற்படும் என்று ஜனாதிபதி சில மாதங்களுக்குமுன் தெரிவித்ததையும் நினைவுகூர வேண்டும்.

வடக்கிலும் தென்னிந்தியாவிலும் என்ன நடக்கிறதென்பதை நாம் அறிதோம். தென்னிந்திய மக்கள் மிகவும் ஆவேசப்படுகிறார்கள். ஏதாவது செய்யுமாறுஅவர்களே திருமதி இந்திரா காந்தியைத் தூண்டுகின்றனர். ஆனல் இந்திராவோ தலையிடப் போவதில்லையென்று இப்பொழுது சொல்கிறார். ஆனல் எவ்வளவுகாலத்துக்கு அவரால் இதற்கு ஈடுகொடுக்கமுடியும்? என்றும் திருமதி பண்டாரநாயகா கேள்வி எழுப்பி இருக்கிறார்.

பிரச்னைகளின் தாக்கத்தை நன்குணர்ந்தும் பாராளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தல் நடத்தவேண்டுமென்பதில் சிறிமாவுக்கு அக்கறையும், தேர்தலைப்பற்றிக் கவலையில்லை பயங்கரவாதத்தைப் பூண்டோடு அழிப்பதுதான் தங்கள் இலட்சியம் என்று ஜனாதிபதியும், பாதுகாப்பு அமைச்சரும்தொடர்ந்துஉறுதி கூறிவருவதும்இருதரப்பினரின் இலட்சியமெல்லாம் ஆட்சிஅதிகாரத்தில் தான் என்பது தெளிவு.

நியூஸ்வீக் சஞ்சிகைநிருபரின் மற்றும் சில கேள்விகளுக்குத் திருமதி சிறிமா அளித்தபதிலை வாசகர்களுக்காக இங்கு தருகிறேன்.

கிப்னி:- கடந்த மாதம் வடக்கில் சண்டை உக்கிரப்படுத்தப்பட்டபோது, அரசாங்கம் பதவியிலிருந்து வெளியேற வேண்டும் என்று நீங்கள் கேட்டீர்கள். ஏன் அப்படிக் கேட்டீர்கள்?

(5-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் கருத்து

# ஜனாதிபதியும் காந்தியமும்

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அண்மையில் நடைபெற்ற இ. தொ. காங்கிரஸின் வருடாந்த மகாநாட்டில் உரையாற்றியபோது வடபகுதி பயங்கரவாதிகள் காந்தியின் கொள்கையைக் கடைப்பிடித்திருந்தால் இன்று நான் கூட அவர்களை வென்றிருக்கமாட்டேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

அகிம்சையின் உச்சக்கட்டம் போராட்டங்களே. பகிஷ்கரிப்பு, ஹர்த்தால், உண்ணுவிரதம் என்பனவாகும். இந்த அரசாங்கம் பதவி ஏற்ற நாள் தொடக்கம் இன்றுவரை எத்தனையோ உண்ணுவிரதங்களைக் கண்டது இந்த யாழ்ப்பாணம். ஆனல் எதற்காவது பலன் உண்டா என்பதே கேள்வி. இவ்வருட ஆரம்பத்தில் யாழ். பல்கலைக்கழக வளவில் இடம் பெயர்ந்த மாணவர்களால் நடாத்தப்பட்ட சாகும்வரை உண்ணுவிரதம் எனும் அகிம்சை வழிப்போராட்டம் தொடங்கி ஒன்றல்ல ஒன்பது தினங்களாகியும் அதுபற்றி அக்கறை கொள்ளாத ஜனாதிபதி ஜெயவர்த்தன காந்தியின் கொள்கைகளைப்பற்றிக் கதைப்பது நகைப்புக்கிடம். ஏன் ஜனாதிபதி கவனம் எடுக்க வேண்டுமென்ருல் நாட்டின் தலைவரும் உயர் கல்வி அமைச்சரும் அவர்தானே.

அதேசமயம் எந்தவிதமுடிவுமில்லாமல் சாக இருந்த ஒன்பது உயிர்களைக் காப்பாற்றியவர்கள் பயங்கரவாதிகளா? அல்லவா என்பது வேறு விடயம்.

இன்னென்று கூறவிரும்புகிறேன் சென்ற வருடம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருந்த பாதயாத்திரையை கண்ணீர் புகைப்பிரயோகம் செய்து கலைத்த இந்த அரசாங்கம் கூறிய காரணம் அவசரகாலநிலை அமுலில் இருந்தது என்பதாகும் ஆனல் அதே அவசரகாலநிலை அமுலிலிருந்தபோது அக்காலகட்டத்தில் பாதுகாப்பு அமைச்சராகிய ஜனாதிபதியால் திரு. ஆரியரெட்ண அவர்கள் நடத்தவிருந்த பாதயாத்திரைக்கு எப்படி அனுமதியளிக்கமுடிந்தது என்பது மட்டுமல்லாமல் அவரே முன்னின்று ஆரம்பித்தும் வைத்தார் என்பது கவனிப்புக்குரியது. இந்தக் காந்தீயவாதிகளின் சொல்லொன்று செயல் ஒன்ருக இருப்பதில்லை.

**செல்வன்**

யாழ்ப்பாணம்.

சாவகச்சேரி' கொடிகாமம் பகுதிகளில்

# ஒழுங்கற்ற பஸ் சேவை: பிரயாணிகள் பாதிப்பு

[சாவகச்சேரி]

வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் பருத்தித்துறை டிப்போவினால் கொடிகாமம் சாவகச்சேரி போன்றஇடங்களுக்கு நடாத்தப்படுகின்ற பஸ்சேவைகள் ஒழுங்காகநடைபெறுவதில்லை எனபஸ் பிரயாணிகள் டிப்போ அதிகாரிகளிடம் புகார் செய்துள்ளனர்.

இதன் காரணமாக பருத்தித்துறையில் இருந்து சாவகச்சேரியிலுள்ள அரசதிணைக்களங்கள், வங்கிகளுக்கு தினசரிவருகின்ற உத்தியோகத்தர்கள் மிகவும் சிரமப்படுகின்றனர்.

அத்துடன் கொடிகாமம், சாவகச்சேரி சந்தைகளுக்கு வடமராட்சிப்பகுதிகளிலிருந்து வருகின்ற வியாபாரிகளும், ஒழுங்கற்ற பஸ்சேவைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# துப்பாக்கிச்சூடு கைக்குண்டு கந்தர்மடத்தில் சம்பவம்

(கோண்டாவில்)

இரு விடுதலை இயக்கங்களிடையே துப்பாக்கிச் சூடு, கைக்குண்டு வீச்சு நடைபெற்றது. இச்சம்பவம் கந்தர்மடம் மணல்தறை ஒழுங்கையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்றது.

ஒரு டெலிக்கா வானில் வந்த துப்பாக்கி இளைஞர்கள் காரில் வந்தவர்களை இடைமறித்துள்ளனர். இதனைத் தொடர்ந்து காரில் வந்தவர்கள் காரைவிட்டு இறங்கியதுடன் கைக்குண்டை வீசியுள்ளனர். பின்னர் துப்பாக்கிச் சத்தங்கள் சுமார் பத்து நிமிடம் வரையில் கேட்டது.

இச்சம்பவத்தின்போது சில இளைஞர்கள் அயலில் உள்ள வேலிகளின் மேலால் ஏறிப் பாய்ந்து ஓடியுள்ளனர். சில இளைஞர்கள் வானில் வந்த இளைஞர்களால்பிடித்துக் கொண்டுசெல்லப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தினால் அப்பகுதியில் உள்ளமக்கள் பீதியுற்று அன்றிரவு வேறு இடங்களில் சென்று தங்கியுள்ளனர்.

## ராணுவம்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யேறியது!

இராணுவத்தினரின் முற்றுகையின்போது சேதத்துக்குள்ளான பகுதிகள் திருத்தி முடிக்கப்படும்வரை இராணுவம் இங்கு இருக்குமென்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

கட்டிடவேலைகள் யாவும் தற்போது முடிந்துவிட்டன. பொற்கோவிலில் இருந்து இராணுவம் வெளியேறிவிட்டபோதிலும் பிரதான வாசலிலும், உண்டியலிலும் இராணுவத்தினர் தொடர்ந்து காவலில் இருப்பார்கள்என்று அறிவிக்கப்பட்டது.

(முன்வந்த செய்தி மூன்றும் பக்கம்)

# அரசஅதிபர், பிரஜைகள் குழுவிற்கு நன்றி

[கரவெட்டி]

கொற்றாவத்தை, பொலிகண்டி, அல்வாய், சமரபாடு, வல்வெட்டித்துறை, திக்கம் முதலியகிராமங்களில் கைது செய்யப்பட்ட ஐநூறுக்கும் மேற்பட்ட இளைஞர்களை விடுவிப்பதற்கும், இரவு நேரங்களில் இக்கிராமங்களை நோக்கி வந்த குண்டு மழையினை நிறுத்தி இப்பகுதி மக்களின் அச்சத்தைப் போக்குவதற்கும் அயராது முயற்சிகள் மேற்கொண்டமைக்காக யாழ். பதில்அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம், யாழ். பிரஜைகள் குழுத்தலைவர் திரு. ஆர். பாலசுப்பிரமணியம் ஆகியோருக்கு நன்றிதெரிவித்து கொற்றாவத்தை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு க பாலசுப்பிரமணியம் நன்றிக்கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

# மாதகல் நிலைமை: 'அமிர்' நேரில் பார்வையிட்டார்

[பண்டத்தரிப்பு]

தமிழர்விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம் மாதகலுக்கும், மாரிசன் கூடலுக்கும் சென்று அங்குள்ளநிலைமைகளை நேரில் பார்வையிட்டார்.

கடந்த சனிக்கிழமை இரவு கடலிலிருந்து பீரங்கிக்குண்டுகள் வந்துவிழுந்த இடங்களையும், பலியான ஆடு நின்ற இடத்தையும் நேரில்சென்று பார்வையிட்ட திரு. அமிர்தலிங்கம் இதுபற்றி மேலிடத்திடம் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளுவதாகவும் தெரிவித்தார்

## 60 மாணவர்களுக்கு..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்களில் இருபத்தேழு மாணவர்கள் பொறியியல் துறைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் நாலு மாணவர்கள் மருத்துவத்துறைக்கும், ஆறுமாணவர்கள் மிருகவைத்தியத்துறைக்கும், இருபத்து இரண்டு மாணவர்கள் விஞ்ஞானத்துறைக்கும், ஒரு மாணவன் கலைத்துறைக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## மின்னேரியா---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரை 88 பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

மின்னேரியா தொகுதியில் ஐ. தே. க., சு. க., மக்கள் கட்சி என்பவற்றுடன் 43 சுயேட்சை வேட்பாளர்களும், குண்டசாலையில் 42வேட்பாளர்களும் தமது கட்டுப்பணத்தை பொலநறுவ, கண்டி கச்சேரிகளில் கையளித்தனர் வேட்பாளர் நியமனப்பத்திரங்கள் தாக்கல்செய்யும் கடைசித் தினம் இன்றாகும்.

## அங்குரார்ப்பணக் கூட்டம்

[சாவகச்சேரி]

அறவழிப் போராட்டக் குழுவினால், சென்ஜோன் அம்புலன்ஸ் முதல் உதவிப் பிரிவின் ஆதரவுடன் நடாத்தப்பட்ட முதல் உதவிப் பயிற்சிகளில் பங்குபற்றியவர்களை ஒன்றிணைத்து ஒரு முதல் உதவிப் பிரிவு அமைக்கும் அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் 30ம்திகதி காலை கைதடியில் நடைபெறவுள்ளது.

## வடக்கின்...

(4-ம்பக்கத் தொடர்ச்சி)

சிறிமா:- முக்கிய விஷயம் மாராளுமன்றத்தை கலைக்க வேண்டும் என்பது; அவர்கள் நீண்டகாலமாக இங்கே இருந்து விட்டார்கள். தாங்கள் விரும்பிய அரசாங்கத்தைத் தெரிவு செய்வதற்கு மக்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டிய காலம் வந்து விட்டது. ஜயவர்த்தனவும் அவரது அமைச்சர்களும் அங்கு இருப்பதற்கு உரிமையில்லை. அவர்கள் மக்களின் நம்பிக்கையை இழந்து விட்டனர்.

கிப்னி:- அதை ஏன் இப்பொழுது சொல்லுகிறீர்கள்.

சிறிமா:- 1977 ஆம் ஆண்டில் அவர்கள்மீது நம்பிக்கை இருந்ததால் எல்லோரும் ஜயவர்த்தனவுக்கு வாக்களித்தனர். தமிழ் மக்களுக்கும் குறைகள் இருக்கின்றதென்பதை அவர் ஏற்றுக் கொண்டார். நிலைமையைச் சரிசெய்யப்போவதாகவும் தெரிவித்தார் இந்த எதிர்பார்ப்புடன் தான் சிங்களவர்களும், தமிழர்களும் அவருக்கு வாக்களித்தனர். ஆனால் எதுவும் நடைபெறவில்லை ஒரே தேசமாக இது இருக்க வேண்டுமாயின் அரசியல் தீர்வு ஒன்று அவசியம் இராணுவத் தீர்வு அல்ல!

கிப்னி:- இவ் விடயத்தில் அரசாங்கம் இப்பொழுதுஅணுகும் முறையைப் பற்றி உங்கள் மதிப்பீடு என்ன?

சிறிமா:- முதலாவதாக பத்திரிகைத் தணிக்கை அமுலிலிருப்பதால் வடக்கில் உண்மையில் என்ன நடக்கிறதென்ற சரியான தகவலைப் பெற முடியாதிருக்கிறது வடக்கு பயங்கரவாதம் நோயின் ஓர் அறிகுறியே இந்த நோயின் காரணத்தை அறிந்து பரிகாரம் தேட நாம் முயற்சிக்க வேண்டும்.

கிப்னி:- உங்கள் யோசனைகள் என்ன?

சிறிமா:- ஒரு பரிகாரம் பொருளாதாரமே இதில்சந்தேகம் இல்லை வேலையில்லாத் திண்டாட்ட நிலை தளர்த்தப்பட வேண்டும் அதற்குக் கூடுதலான கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் அத்தோடு விவசாயிகளுக்கு கூடுதலான பணம் கிடைக்கச் செய்ய வேண்டும்.

மற்றப் பிரச்னை அரசாங்கம் பொதுத் தேர்தலை ஒத்திவைத்தமை இதன்காரணமாக மக்கள் ஆறு வருட காலத்துக்குத் தமது வாக்குரிமையை இழந்து விட்டனர் மூன்றாவது பிரச்னை அரசாங்கம் கூறுவது போல ஜனநாயகத்தை ஆதரிக்காத தீவிர வாதிகளின் நெருக்குதலாகும் இவர்கள் இவ்வாறு தீவிரவாதப் போக்கை கடைப்பிடிக்க நேர்ந்தமைக்கு என்ன காரணம்? இதை அறிய வேண்டும்.

## சித்தாந்த வகுப்பு

[யாழ்ப்பாணம்]

நல்லூர் நாவலர் மண்டபத்தில் சனிக்கிழமை தோறும் காலையில் சித்தாந்த வகுப்பு நடைபெறுகின்றது. சித்தாந்த வித்தகர் ஏழாலை மு. கந்தையா சிவஞானபோதத்தைப் பாடநூலாகக் கொண்டு விரிவுரைகளை நிகழ்த்துகின்றார்.

## இன்று

(யாழ்ப்பணம்)

மயிலங்கூடல் இளவாலை அன்னைவேளாங்கண்ணி மாதா வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. அன்று செபமாலைத்தியானம்' திவ்விய பூஜை, மங்களமாலை, என்பன நடைபெறும்.

தொடர்ந்து விசேட ஆராதனைகள் நடைபெற்று 29ம் திகதி திருச்சொரூப சுற்றுப் பிரகாரமும் இடம்பெறும்.

## மாதகல் பிரஜைகள் குழு

(பண்டத்தரிப்பு)

மாதகலில் பிரஜைகள் குழுவொன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. மாதகலிலுள்ள சகல பொது நல இயக்கங்களின் பிரதிநிதிகளும் இந்த அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

பிரஜைகள் குழுவின் செயற்பாடுகளை யாழ். பிரஜைகள் குழுவுடன் இணைந்து செயல்படுத்துவதென்றுதீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக் குழுவின் நிர்வாகிகள் தெரிவு நடை பெற்ற போது தலைவராக திரு. அ. சந்தியாப்பிள்ளையும் செயலாளராக மாதகல் கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளரும் வலி மேற்கு அபிவிருத்தி உத்தியோகத்தருமான திரு மு பாலசிங்கமும், பொருளாளராக திரு. சி. கந்தசாமியும் தெரிவு செய்யப்பட்டனர்.

நூல் அறிமுகம்

## 'சுகாதார அறிவுரைகள்'

யாழ். வைத்திய சங்கம் பொது மக்களும், மாணவரும் எளிதில் விளங்கிக்கொள்ளக் கூடியமுறையில் 'சுகாதார அறிவுரைகள்' என்னும் நூலை வெளியிட்டுள்ளது.

'எதிரதாக் காக்கும் அறிவு' என்பது திருக்குறள். மனிதன் எதனையும் முன்கூட்டியே அறிந்து காத்துக்கொள்ளும் அறிவுடையவனாக இருத்தல் வேண்டும். பல தடுக்கக்கூடிய நோய்களை நாம் சுகாதார முறைகளைத் தெரிந்துகொள்வதன்மூலம் தடுத்து நல்வாழ்வு வாழமுடியும் இதற்கு நமக்கு அடிப்படைச் சுகாதார அறிவு இருந்தாற் போதும்.

யாவரும் உண்ணவேண்டிய உணவு, கர்ப்பவதிகளின் போஷாக்குணவு, குழந்தைகளின் போஷாக்குணவு, நோய்த்தடை, வயிற்றோட்ட நோய்கள் தடுப்பு, குடும்பக் கட்டுப்பாடு, நீரிழிவும் அதன் கவனிப்பும், மாரடைப்பு, விபத்துக்கள் தவிர்த்தல், புற்றுநோய், புகைத்தல் மதுபானம் தவிர்த்தல், பற்காப்பு, முதலுதவி போன்ற பல்வேறு தலையங்கங்களின் கீழ் பயனுள்ள கருத்துக்களை வழங்கும் இந்நூல் ஒரு பெறுமதி மிக்க மருத்துவக்களஞ்சியமாகத் திகழ்கிறது.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பார்கள். அத்தகைய குறைவற்ற செல்வத்தைப் பெறுவதற்கு உதவக்கூடிய இந்நூலை வைத்திய நிபுணர் கிருஷ்ணராஜா அவர்கள் மிகச்சாதாரண மக்களும் விளங்கிக்கொள்ளும் முறையில் இந்நூலை ஆக்கியிருப்பது ஒரு அரும்பெரும்பணி என்றே குறிப்பிடவேண்டும். இதனை மிகக்குறைந்த விலையில் மூன்று ரூபாவிற்கு நமக்குக் கிடைக்கச்செய்யும் யாழ். வைத்திய சங்கத்தின் சேவை பாராட்டுக்குரியது.

—சுகதேகி

## பொலிஸ்நிலையம்--

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தில்நடைபெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தையடுத்து பருத்தித்துறையிலுள்ள பலகடைகள், ஹாட்லிக் கல்லூரி. மக்கள் சந்தைக் கட்டிடம் என்பன தீக்கிரையாகின.

ஹாட்லிக் கல்லூரியின் புதிய கட்டிடம், நூல்நிலையம் வகுப்பறைக் கட்டிடங்கள், தளபாடங்கள் என்பன தீக்கிரையாக்கப்பட்டன. அதிஷ்டவசமாக இச்சம்பவங்கள் நடைபெற்றதினம் சனிக்கிழமையாக இருந்தமையால் மாணவர்கள் பாடசாலையில் இருக்கவில்லை. அன்று ஒரு பாடசாலை நாளாக இருந்தால் எமது பிள்ளைகளுக்கு எண்ணிப் பார்க்கமுடியாத விளைவுகள் ஏற்பட்டிருக்கலாம்.

''இக்கல்லூரிகளுக்கு அருகாமையில் பொலிஸ் நிலையமும் அதிரடிப்படைப் பிரிவும் இருப்பதனால் எமது பிள்ளைகளை இக்கல்லூரிகளுக்கு அனுப்பமுடியாதுள்ளது. இதனால் இக்கல்லூரிகளுக்கு அருகாமையில் உள்ள பொலிஸ் நிலையத்தையும், அதிரடிப் படைப்பிரிவையும் இடம்மாற்றி எமதுபிள்ளைகளுக்குப் பாதுகாப்பு வழங்கி கல்வியைத் தொடர ஆவன செய்யவேண்டும்;

இக்கடிதத்தின் பிரதிகள் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி, கல்வி அமைச்சர் திரு ரணில் விக்கிரமசிங்க, யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் ஆகியோருக்கும அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## லலித்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழில் உரையாற்றினர்.

இலங்கை பனை அபிவிருத்திச்சபையினர் ஏற்றுமதி செய்வதற்கென சேகரித்த பனந்தும்பை அமைச்சரிடம் கையளித்த போது அங்கிருந்தவர்கள் மத்தியில் பேசுகையிலேயே அமைச்சர் தமிழில் பேசினார். தனது உரையை அவர் எழுதி வாசித்தார்.

## பல்கலைக்கழக...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

உயர்தர பரீட்சையில் தெரிவாகும் மாணவர்களிடையே மற்றுமொரு விசேட பரீட்சை நடத்த வேண்டும் என்று இக்குழு தெரிவித்துள்ளது.

## சர்வகட்சி---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் மகாநாட்டில் மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டது.

சர்வகட்சி மகாநாடு முடிவடைந்ததும் மாநாட்டுப் பேச்சாளர் தரும் மாநாட்டு விபரங்களைத் தவிர; மாநாட்டைப் பாதிக்கக்கூடிய வேறு செய்திகளையோ அல்லது எந்த விதமான கருத்துக்களையோ அல்லது கண்டுபிடிப்புகளையோ வெளியிடவேண்டாம் என்றும், நல்ல சூழ்நிலையைக்குழப்பவேண்டாமெனறும் திரு. குணதுங்கா கேட்டுள்ளார்.

## கல்முனை...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக்காலை மக்கள்வங்கிக்குக் கிடைத்த அனாமதேய தொலைபேசித் தகவலில் காலை 10 மணிக்கும் 11 மணிக்கும் இடையில் குண்டு வெடிக்கும் என்று தெரிவிக்கப்பட்டதாம். இதனைத்தொடர்ந்து ஊழியர்கள் வெளியேற்றப்பட்டு தீவிர சோதனை நடந்தது. வெடிகுண்டுகள் எதுவும் அங்கே இருக்கவில்லையாம்.

## முல்லைத்தீவு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களாக்கியுள்ளது, நேற்றுவரை மட்டும் தற்காலிகமாத் தங்ககப்போவதாக முல்லைத்தீவு கல்விப்பணிப்பாளரிடம் தெரிவித்து இந்த இடங்களில் குடியேறினர்கள்.

இப்போது ஏராளமான இளைஞர்களைக் கைது செய்து இப்பாடசாலைகளில் வைத்திருப்பதால், உடனடியாக பாடசாலைகளைவிட்டு ராணுவத்தினர் வெளியேறுவார்களா என்பது கேள்விக்குறியாக வுள்ளது.

முல்லைத்தீவுப் பகுதியில் மக்கள் பீதியுடனும். அச்சத்துடனும் இருப்பதாகவும். வீதிகளில் நடமாட்டம் மிகக்குறைவாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது,

முள்ளியவளை வித்தியானந்த வித்தியாலயத்தில் இ. போ. ச. பஸ்களும், ஹெலிகாப்டரும் நிற்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கரணவாய் கலாவதி மரணவிசாரணை:

# சட்டப் பிரச்னை பற்றி ஒருமணிநேரம் நடைபெற்ற ஆலோசனை

### விசாரணை ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

''இம்மாதம் 16-ம் திகதி காலை 7மணிக்கு கலாவதியின் 'வார் டிக்கட்' எனக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. அதில் கலாவதி இறந்துவிட்டதாகக் கூறப்பட்டிருந்தது. குண்டு வெடிப்பினுல் ஏற்பட்டகாயங்க... என்றும் அதில் கூறப்பட்டிருந்தது''.

கரணவாய் கலாவதி மரண விசாரணையில் சாட்சியமளித்த யாழ். ஆஸ்பத்திரி பொலிஸ் பொறுப் திகாரி இ. பாலசுப்பிரமணியம் மேற்கண்டவாறு கூறினுர்.

யாழ். நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் இவ் விசாரணை தொடர்ந்து நடைபெற்ற...

நீதிமன்றத்திற்கு உதவியாகச் சட்டத்தரணிகள் கே. வி. நவரத்தினம், ஆர். விசுவநாதன், ஆர். பாலசுப்பிரமணியம் ஆகியோர் ஆஜரானுர்கள். பொலிஸ் தரப்பில் வல்வெட்டித்துறைப் பொலிஸ் சார்ஜன்ட் பூலிங்கம் ஆஜரானுர்.

பொலிஸ் பொறுப்பதிகாரி திரு சி. பாலசுப்பிரமணியம் கூறியதாவது:- ''கலாவதி 15-ம் தேதி இரவு 11-45 மணிக்கு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். மறுநாள் அதிகாலை இறந்துவிட்டார்.

''கடந்த ஒருமாத காலமாகப் பொலிஸ் 'போஸ்ட்' இரவில் இயங்குவதில்லை. மறுநாள் காலை 7மணிக்கு 'வார்ட்' டிக்கட் கிடைத்தது. அதில் கலாவதி இறந்துவிட்டதாக இருந்தது.

''வல்வெட்டித்துறைப் பொலிசிற்குத் தொலைபேசி மூலம் அறிவித்தேன். வல்வெட்டித்துறையிலிருந்து நண்பகல் 1மணிக்கு இரு பொலிசார் பிரேத பரிசோதனைக்கான உத்தரவைக் கொண்டு வந்தார்கள். அவர்களை, சட்ட வைத்திய அதிகாரியிடம் அனுப்பிவைத்தேன்.

மன்று: பருத்தித்துறை நீதவானிடமிருந்து வந்ததா? ஆம் பிரேதபரிசோதனை செய்யும்படி கூறப்பட்டிருந்தது. சட்ட வைத்திய அதிகாரி பிரேதபரிசோதனை செய்து முடித்தார் அதன்பின் இரண்டு பொலிசாரும் மரணவிசாரணை பருத்தித்துறையில் நடக்கும் என்று கூறிவிட்டுச் சென்றுர்கள். அப்போது இறந்தவரின் உறவினர்கள் வந்திருப்பதாகவும், அவர்களிடம் சடலத்தைக் கொடுக்க வேண்டுமென்றும் அதற்கான உத்தரவைத் தரும்படியும் சொன்னேன். தாங்கள் அந்த உத்தரவை கொண்டு வரவில்லை' என்றுர்கள். அங்கு போய் அனுப்புவதாகக் கூறிவிட்டுச் சென்றுர்கள். உறவினர்கள் வந்து சடலத்தை கொண்டு போகவேண்டும் என்று கட்டாயப்படுத்தினுர்கள். நான் தொலைபேசி மூலம் பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டேன்.

''பிரேத பரிசோதனை முடிந்து விட்டது. உறவினர்கள் சடலத்தை கேட்கிறுர்கள். என்றேன் அதற்கு அவர் சடலத்தை ஒப்படைக்கும் உத்தரவை அனுப்புவதாகவும் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறும் எனக்கு உத்தரவிட்டார். அதன்படி நான் சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்குமாறு வைத்திய அத்தியட்சகருக்கு தெரிவித்தேன்.

மன்று: பிரேதபரிசோதனையின் போது நீர் சமுகமளித்திருந்திரா?- இல்லை.

மன்று: பிரேதபரிசோதனை நடைபெற்றபோது, நீதவான் அல்லது மரணவிசாரணை அதிகாரிவந்தது தெரியுமா?- இல்லை.

மன்று: என்ன முறையில் சடலம் கொடுபட்டது?- பருத்தித்துறை பொறுப்பதிகாரி சடலத்தை கொடுக்கும்படி அறிவித்தார்.

மன்று: கலாவதி யாழ்ப்பாண பொலிஸ் எல்லைக்குள் இறந்தார்?-ஆம்

மன்று: அப்படியானுல் ஏன் யாழ். நீதவானுக்கு அறிவிக்கவில்லை?- வழமையாக ஒரு பொலிஸ் பகுதியில்ருந்து ஒரு காயப்பட்டவர். யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு வந்து இறந்தால் காயப்பட்டவர் எங்கிருந்து வந்தாரோ அந்தப் பொலிஸாருக்கு அறிவிப்பது வழக்கம்.

சுமார் ஒருமணிநேரம், சட்டப்பிரச்னைபற்றி ஆலோசனை செய்யப்பட்டது.

யாழ். பொலிஸ் அதிபர் மூலம், காகேசன்துறை உதவி பொலிஸ் அதிபருக்கும், வல்வெட்டித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரிக்கும, மீண்...ம் அடுத்த தவணைக்கு சமுகமளித்து சாட்சியமளிக்கும்படி நோட்டிஸ் அனுப்புமாறு நீதவான் உத்தரவிட்டார். விசாரணை அடுத்தமாதம் 8ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (க)

---

## விஞ்ஞான முறையில் உடை தயாரிப்பு பயிற்சிநெறி

(மானிப்பாய்)

''இன்றைய உலகில் கல்வி பயிலும் அனைவரும் வேலைவாய்ப்புப் பெறுவதற்கில்லை. எனவே சுயதொழில் செய்வதே சாலச் சிறந்தவழியாகும்'' எனகோப்பாய் வட்டாரக்கல்வி அதிகாரி திரு ஆ. வ. தங்கராசா தமது தலைமையுரையில் தெரிவித்தார்.

கோப்பாய் கல்விமூலவள நிலையமும் யாழ். தேசியகூட்டுறவுச்சபையும் இணைந்துநடாத்தும் விஞ்ஞான முறையிலான உடை தயாரிப்புப் பயிற்சிநெறியின் அங்குராப்பண வைபவம் கோப்பாய்கல்வி மூலவள நிலைய விரிவுரை மண்டபத்தில் நடந்தது.

கோப்பாய் கல்வி மூலவள நிலையப்பொறுப்பதிகாரி திரு. எஸ்.சி.எஸ். சிதம்பரநாதனும் பேசினுர். இப் பயிற்சிநெறியில் 48 யுவதிகள் பங்குகொள்கின்றனர். போதனசிரியையாக செல்வி எஸ் யோகராணி கடமையாற்றுகிறுர்.

---

## ரூபவாஹினி

மாலை

5-30 ,ரோய் பொக்ஸ்' சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்)
6-00 ஹியர்ஸ் பூமர் (ஆங்கிலம்)
6-25 'ரொம் அன்ட் ஜெரி' கார்ட்டூன் (ஆங்கிலம்)
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 இசை (சிங்களம்)
7-45 தகவல் நிசழ்ச்சி (சிங்களம்)
8-15 செய்திகள் (சிங்களம்)
8-35 'ரன்கஹவனு' நாடகம் (சிங்களம்)
9-00 ஜெனட்டிக் எஞ்ஜினியரிங்' (ஆங்கிலம்)
10-30 உலகச் செய்திகள்
10-35 நிகழ்ச்சிகள் முடிவு

---

## ஏழாலையில் 'ரேனியோ' கொள்ளை

[மாவிட்டபுரம்]

ஏழாலை மகாவித்தியாலயத்தில் துப்பாக்கி முனையில் ரேனியோ இயந்திரம் கொள்ளையடிக்கப்பட்டது.

துப்பாக்கியுடன் வந்த 5 இளைஞர்கள், காவலாளியைக் கட்டி வைத்துவிட்டு கொள்ளையை நடத்தியதாகக் கூறப்படுகிறது. காவலாளியான திரு கே. கனகராசா காங்கேசன் துறை பொலிசில் புகார் செய்துள்ளார்.

---


நீடிக்கப்பட்டுள்ளது

எஸ்-லோன் வீடுகட்டுவோர் சீட்டிழுப்பு.

எமது புதிய வாடிக்கையாளர்களும் சீட்டிழுப்பின் அதிர்ஷ்டத்தைப் பெற...

S-LON



உங்கள் எஸ்-லோன் பி.வீ.சி. குழாய்களும் இணைப்புகளும் முற்றிலும் இலவசம்!

எஸ்-லோன் வீடு கட்டுவோரின் சீட்டிழுப்பில் உங்களுக்கும், உங்கள் வியாபாரிகளுக்கும், ஏன் உங்கள் குழாய்த்தொழிலாளருக்குமே பரிசில்கள் உண்டு.

இது எஸ்-லோன் பாவனையாளருக்கு மூன்று மாதங்கட்கொரு முறை நாம் தரும்பரிசாகும்.

இதோ எஸ்-லோன் பி.வி.சி. குழாய் உற்பத்தியாளர்கள் தரும் ஒரு வெகுமதி.

நீங்கள் செய்யவேண்டியதாவது:

1. உத்தரவுபெற்ற எஸ்-லோன் வியாபாரி எவரிடமாவது சென்று எஸ்-லோன் குழாய்களையும் இணைப்புகளையும் வாங்குங்கள்.

2. அக்கொள்வனவுக்கு ஓர் பற்றுச்சீட்டினையும் அதனை உறுதிப்படுத்தும் ஓர் உறுதிச்சீட்டையும் கேட்டு வாங்குங்கள்.

3. பற்றுச்சீட்டையும் உறுதிச்சீட்டையும் கீழ்க்கண்ட கூப்பனுடன் எமக்கு அனுப்புங்கள்.

நாம் சீட்டிழுப்பு நடத்துவோம். நீங்கள் அதிர்ஷ்டசாலியானுல் உங்கள் உறுதிச்சீட்டிலுள்ள முழுத் தொகையையும் ரொக்கமாக உங்களுக்கே திருப்பித் தருவோம். இதன் மூலம், எஸ்-லோன் தயாரிப்புகளை நீங்கள் முற்றிலும் இலவசமாகப் பெறுவீர்கள்.

பரிசுகள் இதோ:

பிரிவு அ
ரூ. 5000/- முதல் ரூ. 15,000/- வரையிலான கொள்வனவிற்கு 10 பரிசுகள்.

பிரிவு ஆ
ரூ. 2500/- முதல் ரூ. 5000/-வரையிலான கொள்வனவிற்கு 10 பரிசுகள்.

பிரிவு இ
ரூ. 2500/- க்குக் குறைந்த கொள்வனவிற்கு 25 பரிசுகள்.

சிறந்த வடிவமைப்புக்கும் வேலைப்பாட்டுக்கும் குழாய்த்தொழிலாளருக்குரிய சன்மானம் ரொக்கம் ரூ 5000/-

வியாபாரிகளுக்கும் பரிசில்கள் உண்டு.

முக்கியம்:

த மஹாராஜா ஆர்கனைசேஷன் லிமிட்டெட் டினதும் அவர்களது விளம்பர முகவர்களான கெரட்ஸ் அட்வரைசிங் தாபனத்தினதும் ஊழியர்களையும் அவர்களது குடும்பத்தவர்களையும் தவிர்ந்த ஏனைய இலங்கைப் பிரசைகள் அனைவரும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

இக்கூப்பனை பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்:
எஸ்-லோன் வீடுகட்டுவோரின் சீட்டிழுப்பு,
467, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.

பெயர் ____
முகவரி ____
கட்டிடத்தலத்தின் அமைவிடம் ____
குழாய்த்தொழிலாளரின் பெயர் ____
வியாபாரியின் பெயர் ____
முகவரி ____

எஸ்-லோன் குழாய்கள் இணைக்கப்படுவதை நேரிற் சென்று பார்வையிடுவதற்கு மஹாராஜா ஆர்கனைசேஷனின் பிரதிநிதியொருவருக்கு இத்தால் அதிகாரம் அளிக்கப்படுகிறது.

தேதி ____ கையொப்பம் ____

இன்று பி.வி.சி. குழாய்களுள் முதற் தரமானது எஸ்-லோன் ஏன்? ____

GARADS

S-lon
நிகர் வேறில்லை

முடிவு திகதி 1984 அக்டோபர் 30
விலை ஒரு மீட்டர் 12/05 முதல்

உற்பத்தியாளர்கள்:
த மஹாராஜா ஆர்கனைசேஷன் லிமிட்டெட்

விற்பனை அலுவலகங்கள்:
467, யூனியன் பிளேஸ்,
கொழும்பு-12.

விபரங்களை உங்கள் வியாபாரியிடம் பெறுங்கள்.

## முருகன் ஆலயம்

[புலோலி]

வதிரி பரமானந்தா ஆச்சிரமத்தில் இருக்கும் அனுதைகளின் நன்மை கருதி இங்கு முருகன் ஆலயம்ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

**மனோகரா** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
சிவாஜி—மாலினி
**சபாஷ்மீனு**
29-9-84 முதல் தீ

**சாந்தி** (யாழ்நகர்)
10-30, 2-30, 4-45.
Christopher Lee
CAPTAIN
AMERICA
Action-Thrill-Colour

**ஸ்ரீதர்** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி - பத்மினி
**பேசும்தெய்வம்**

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம். ஜி. ஆர்.
சரோஜாதேவி
**அரசகட்டளை**
28 முதல்
ரயில் பயணங்களில்

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
எஸ். எஸ். ஆர். - விஜயகுமாரி
**அல்லி**

**வின்ஸர்** [யாழ்.]
தினசரி 10-30, 2-30. 6-15
கமல் ... ஸ்ரீதேவி
(இருவேடம்)
**கல்யாணராமன்**
(புதிய பிரதி)

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00 4-30
— 6-45
Limited Engagement!
Every lovers should
see this film!
Willie games......
Phoebe crates
PARADISE
(Color) strictly for adults)
கண்டிப்பாக 17 வயதுக்குட்பட்டவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்

**றீகல்** [யாழ் நகர்]
10-30, 2-30, 6-00
ஜெய்சங்கர் - ராதிகா
நாகேஷ்
மறைந்த டிங்கிரி
கனகரெட்ணம்-
எஸ். தர்மலிங்கம்
**ரத்தத்தின் ரத்தமே**
(புதியபிரதி - ஈஸ்மன்கலர்)

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 4-45
THE BURNING

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00,
சிவாஜி-சாரதா-
சுந்தரராஜன்
நடித்த
**ஞான ஒளி**
இந்தியாவிலிருந்து பிரத்தியேகமாக பெறப்பட்ட புதிய கொப்பி

# இன்றைய பலன்

மாதம்—புரட்டாதி
திகதி—11(27-09-1984)
வாரம்—வியாழன்
திதி—திருதியை பின் இரவு 1-58வரை
நக்ஷத்திரம்—சித்திரை காலை 9-33ன்மேல் சுவாதி

மேடம்:- களஸ்திரவழியால் சுகம் உண்டு குடும்பத்தில் பாசத்தின் பிணைப்பு இறுகும் காதலர் உலகில் கனிவான சம்பவங்கள் நடைபெறும்.

இடபம்:- எதிர்பாரத முனையிலிருந்து ஆபத்து உருவாகும் உள்வீட்டிலேயே சிறிய பூசல்கள் தோன்றக் கூடும் இயந்திரங்களுடன் பழகுபவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

மிதுனம்:- பெருமையுடன் தலைநிமிர்ந்து வாழுவீர்கள் பிதாவழித்தனமும் சேரும் தான தருமங்களில் ஈடுபாடு ஏற்படும் புகழும் சேரும்.

கடகம்:- தொழில் மாற்றம் அல்லது இருப்பிட மாற்றத்திற்கு வழிகோலப்படலாம். இதன் மூலம் பதவியின் உயர்வும் கிடைக்கலாம் பேட்டி காண்பதற்கு ஏற்ற தினம்

சிங்கம்:- இன்று அதிக ஆதாயம் கிடைக்கும் புதுத் தொழில் முறைகளை மனம் நாடும் நீண்ட பிரயாணம் மேற்கொள்ள இடமேற்படலாம்.

கன்னி:- பகைவர்கள் பதுங்குவர் பாதையில் தடைகள் உண்டு நம்பிக்கை மோசடி மூலம் பண்மும்பறி போகலாம் முன் எச்சரிக்கை நன்று.

துலாம்:-செய்யும்தொழிலில் சிரம் தோன்றக்கூடும். உடல் நலமும் சிறிது பாதிக்கப் படலாம் நண்பர் ஒருவர் உங்கள் காலை வாரிவிடுவதற்கு முனையக்கூடும்.

விருச்சிகம்;- பிரச்சினைகள் பல இன்று நல்ல முடிவைத் தரும் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும் பேச்சில் நிதானமும் பெருமையைத் தேடித்தரும்.

தனுசு:- எதிர்பார்த்த விடயம் இடையில் தடைப்படும் சிலர் வாழ்க்கையில் கடன் தொல்லையும் அதிகரிக்கும் பகோதரவழியால் சஞ்சலதத்திற்கும் இடமுண்டு.

மகரம்:- தாய் வழியால் பெருமைகள் வந்து சேரும் தனத்துடன் வாழ்வும் கிடைக்கும் எதிரிகள் கூட உங்களை வரவேற்பார்கள் மருத்துவத் துறையில் ஈடுபடுவோருக்கு மகத்தான தினம்.

கும்பம்:- மக்களால் மகிழ்ச்சி புதுமையில் நாட்டம் குடும்ப பிரச்னைகளில் சுமுகமான நிலை தென்படும் இன்று பொன்னுள்.

மீனம்:- முன்னேற்றம் தடைப்படும் எதிரிகளின் சூழ்ச்சிகள் பலமாக இருக்கும் உடல் நலத்தை பேணிநடக்கவும்.

திருமலை
வே. ரவீந்திரன்

# தமிழ் தீவிரவாத...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம்நோக்கிச்செல்வதற்குப் படகுகள் தயாராகி விட்டன.

40 குதிரைச் சக்திகளைக் கொண்ட மூன்று மோட்டார் படகுகளும் கெரில்லா வீரர்களுடன் புறப்பட்டன

ஈ பி ஆர் எல் எவ் இயக்கத்திடம் 115பரிவலுசக்தி கொண்ட மோட்டார் படகு ஒன்று இருக்கிறது.

125 குதிரைச்சக்தி கொண்ட மற்றொரு படகொன்றையும் அவ்வியக்கம் வாங்கவுள்ளது. மிகப்பெரிய சக்திவாய்ந்த படகுகள் அவசியம் தேவையென்பதை விடுதலைப் புலிகளும் ஈபிஆர் எல் எவ் இயக்கமும் இப்போது உணர்ந்துள்ளன. இலங்கைக் கடற்படையின் கடுமையான கண்காணிப்பை முறியடிக்க இந்தப் பெரிய படகுகள் மிகமுக்கியமானது என்பதை உணர்ந்து இப்போது அவற்றை வாங்கும் முயற்சியில் இறங்கியுள்ளன.

இந்தியக்கடல் எல்லையின் நடுப்பகுதிக்கு மாலை 5மணிக்கு வந்துசேர்ந்தோம். நேரம் போகிறது சூரியன் கடலோடு சங்கமிக்கின்ற அந்த நேரத்தில் இளம் கெரில்லாவீரர்சொன்ன செய்தி எல்லாரையும் ஈர்த்தது.

''அமெரிக்கப்படகு'' ஒன்று வந்துகொண்டிருக்கிறது என்ற செய்தியைத் தட்டிக்கழிக்க முடியவில்லை!

பதினைந்து நிமிடங்களுக்கு அந்த அமெரிக்கப் படகினைக் கண்காணித்தோம்!

கெரில்லா வீரர்கள் அந்த நேரத்தில் ஒரு தகவலைச்சொன்னூர்கள்.

அமெரிக்கக் கப்பல்கள் 2 இலங்கை கடல் எல்லைக்குள் ஒரு மாத காலமாக நிறுத்தி வைக்கப்பட்டதென்றும், ''சினேகிதபூர்வமான'' விஜயமென்றும் அந்தக் கெரில்லா இளைஞர்கள் சொன்னூர்கள்.

சூரியனை கடல் விழுங்கி விட்டது! இரவு மணி ஏழு. துப்பாக்கிப் படகு நமக்கு ஆபத்தை ஏற்படுத்தலாமென்ற அச்சம் அட் மிரலுக்கு வந்தது.

துப்பாக்கிப் படகை விலத்திக் கெண்டு, யாழ்ப்பாணம் போய்ச் சேர்ந்துவிடலாம் என்ற ஒரு நம்பிக்கையும் அட் மிரலுக்கு இருந்தது.

சில நிமிடங்களின் பின், துப்பாக்கிப் படகு மிகச் சமீபமாக வருவதை இளம் கெரில்லா வீரர் ஒருவர் சுட்டிக் காட்டினூர்.

''அவர்கள் சுட்டால் நாங்கள் திருப்பிச் சுடமாட்டோம். நாங்கள் ஓடுவோம். நாங்கள் துப்பாக்கி படகை சுட்டு சேதப்படுத்தினுல் கடற்படையினர் யாழ்ப்பணத்திலுள்ள அப்பாவி மக்களைச் சுட்டுக் கொன்று விடுவார்கள் நாங்கள் இப்படியான நிகழ்வுகளை தவிர்க்கவே விரும்புகிறோம் எங்கள் மக்கள் பெருங்கஷ்டங்களை அனுபவித்து விட்டார்கள் போதும் போதும் என்று விட்டது அவர்களுக்கு? ''என்று கெரில்லா வீரர் ஒருவர் சொன்னூர்.

படகோட்டிக்கும், அட்மிரலுக்குமிடையில் கடும் வாக்குவாதம் நடந்தது. வேதாரணியத்துக்குத் திரும்பிப் போகலாமன்று அட்மிரல் சொன்னூர் இதே போன்று பல ஒக்கட்டான சோதனைகளுக்குமிடையில் படகைச் செலுத்திச் சென்றதாக படகோட்டி சொன்னூர்.

துப்பாக்கிப் படகுகள் ஐந்து ஆறு நிற்பதை அவதானிக்க முடிந்தது. இவ்விதம் முன்னர் பாதுகாப்பு ஏற்பாடு இருக்கவில்லை என்று அட்மிரல் கூறினூர்.

''இரண்டு துப்பாக்கிப் படகுகள் மட்டும் என்றுல் அவற்றைச் சிதறடித்து விடலாம் என்று அட்மிரல் சொன்னூர்.

ரோந்து நடவடிக்கைக்காக சிங்கப்பூரிலிருந்து, கப்பல்களை வாங்கியதாக செய்திகள் வந்தன. நவீன கருவிகளை அமெரிக்க நிபுணர்இணைத்ததாகவும் செய்தி.

அட்மிரலின் கூற்றுக்களை ஏற்றுக்கொண்டு படகு வேதாரணியத்தை இரவு 10-30 மணிக்கு வந்தடைந்தது

ஆறரை மணி நேரம் கடலில் சஞ்சலித்து சில திகில் அனுபவத்துடன், முற்றுப்பெறுத ஆசையுடனும் வந்து சேர்ந்தோம. கடந்த மூன்று வருட அனுபவத்தில் இப்படித் திரும்பி வந்தது இரண்டாவது தடவை என்று அட்மிரல் கூறினூர்.

'பாதுகாப்பு இல்லத்துக்கு' வந்து சேர்ந்தோம்.

அடுத்த இருநாட்களில் மீண்டும் செல்வதற்குத் திட்டமிடப்பட்டது. ஒருமுறை செல்வதற்குப் பத்தாயிரம் ரூபா செலாகிறது.

உமா, பிரபா கோஷ்டிகள் இணையும் சாத்தியங்கள் ஏற்பட்டிருப்பதையும் அறிந்தோம்,

# இராணுவ வெளியேற்றம் அகாலிதள் வரவேற்பு!

(புதுடில்லி)

அமிர்தசரஸ் பொற்கோயிலிலிருந்து இராணுவத்தை வெளியேற்றும் மத்திய அரசின் முடிவை 'அகாலிதள்' கட்சித் தலைவர் உட்பட இந்திய எதிர்க் கட்சித் தலைவர்கள் பலர் வரவேற்றுள்ளனர்.

''மத்திய அரசின் இந்தச் செயல் ஓர் ஆக்கபூர்வமான நடவடிக்கை'' என்று அகாலிதள் 'நோக்குவால்' பிரிவுத் தலைவர் பகத் ஜெகத்சிங் தெரிவித்துள்ளார்.

லோக்தள் தலைவர் சரண்சிங், காங்கிரஸ் ஜே கட்சித் தலைவர் ஜெகஜீவன்ராம், முன்னுள் பிரதமர் மொரார்ஜி தேசாய் ஆகியோரும் இதனை வரவேற்றுள்ளனர். (சூ)

# ''பாவனையாளர் சங்கங்கள் விழிப்புடன் செயலாற்ற வேண்டும்''

[பண்டத்தரிப்பு]

''தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் உணவுப்பொருட்களையும் மற்றும் அத்தியாவசியப் பொருட்களையும் பொது மக்கள் தட்டுப்பாடு இன்றி இலகுவாக பெற்றுக்கொள்ள பாவனையாளர் பாதுகாப்பு சங்கங்களும் துரிதமுடன் இயங்கவேண்டியது அவசியமானதாகும். பொருட்களை பதுக்கிவைப்பது, கொள்ளைலாபம் அடிப்பது, நிறைகுறைத்துப் பொருட்களைப் விற்பது ஆகியன தொடர்பாக பாவனையாளர்பாதுகாப்புச் சங்கங்கள் விழிப்புடன் செயலாற்ற வண்டும்''.

இவ்வாறு பண்டத்தரிப்பு பாவனையாளர் பாதுகாப்புச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றுகையில் பண்டத்தரிப்பு கிராமசேவை உத்தியோகத்தர் திரு எஸ். சுந்தரமூர்த்திகுறிப்பிட்டார்.

பண்டத்தரிப்பு வை.எம்.சி ஏ மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பண்டத்தரிப்பு மத்தியகிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு மு. நடராசா உரையாற்றுகையில் ''கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்கபொருட்களை அதிக விலைக்கு விற்கும் வர்த்தகர்கள் மீது சங்கம்நடவடிக்கை மேற்கொண்டு பாவனையாளருக்கு நிவாரணம் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று கூறினூர்.

பண்டத்தரிப்பு கிராமஅபிவிருத்திச்சங்கத் தலைவர் திரு ஏ. வி. துரையப்பா, வைத்தியலாநிதி பாக்கியநாதர் அத்தனுசியார் ஆகியோரும் உரையாற்றினூர்கள். பின்வருவோர் சங்க நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்படனர். தலைவர்:- டாக்டர் பாக்கியநாதர் அத்தனுசியார் செயலாளர்:- என் எம். கந்தசாமி பொருளாளர்:- ,, ,, குலசிங்கம்.

# கலாவதி குடும்பத்திற்கு நிதிஉதவி

[புலோலி]

பொலிகண்டிகடலில் அண்மையில் நடைபெற்ற குண்டு வெடிப்பினுல் பாதிப்படைந்து மரணமான கர்ப்பிணிப்பெண் கலாவதியின் குடும்பத்திற்கு வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு 1,000 ரூபா நிதிஉதவி வழங்கியுள்ளது.

பருத்தித்துறையில் அண்மையில்நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தினுல் மரணமடைந்த சந்தா தோட்டத்தைச்சேர்ந்த வ. ஜெயபோஸின் குடும்பத்திற்கு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் பண உதவியை வழங்கியுள்ளது.

# ''இசைப் பிரியர்களுக்கு பேரிழப்பு''

[யாழ்ப்பாணம்]

''இசைத்துறையில் மிக நேர்த்தியான வித்துவத் தன்மை பொருந்தியவரும், 'வேய்ங்குழல் வேந்தன்' என்ற சிறப்புப்பட்டம்பெற்ற இசைக் கலைஞருமான அரியநாயகத்தின் மறைவு இசைப் பிரியர்களுக்கு பேரிழப்பாகும்.''

இவ்வாறு அகில இலங்கை திருமுறை மன்றத்தினர் திருநெல்வேலி கிழக்கு ஸ்ரீ வாலை அம்மன் ஆலயத்தில் நடத்திய அமரர் அரியநாயகத்தின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொண்டு மேற்படி மன்ற அமைப்பாளர் திரு சி. கிருஷ்ணமூர்த்தி உரையாற்றுகையில் கூறினூர்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்:-

''அரியநாயகம் அவர்கள் இசைக்கு மட்டுமல்ல, சைவத்திற்கும், தமிழிற்கும் தொண்டாற்றினூர்'' என்று கூறினூர்

# கேள்வி அறிவித்தல்

## யாழ்ப்பாண அபிவிருத்திச் சபை

1984-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 22-ந் திகதி காலை 10-00 மணிவரை யாழ். அபிவிருத்திச்சபை பிரதிச் செயலாளரால் திருநெல்வேலிச் சந்தையில் திறந்த வெளிக் கூடக் கட்டடம் அமைப்பதற்கு அரசாங்கத் திணைக்களங்கள், அபிவிருத்திச் சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்றங்களில் ரூ. 50 000/-க்கு மேற்பட்ட தொகைக்குப் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் இணைப்பிரதிகளில் அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் இடப்பட்டு பிரதிச் செயலாளர் (நிர். சட். வேலை) யாழ். அபிவிருத்திச் சபை த. பெ. இல. 19 யாழ்ப்பாணம் என விலாசமிடப்பட்டு 1984 ஒக்டோபர் மாதம் 22-ந் திகதி காலை 10-00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல்வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் என்ன வேலைக்கான கேள்வி என எழுதப்படல் வேண்டும், அன்றையதினம் காலை 10-05-க்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவர் பிரதிநிதியோ சமுகம் அளிக்கலாம்

கேள்விப்பத்திரங்கள் நல்லூர் உப அலுவலகத்தில் 1984 ஒக்டோபர் 15-ந் திகதி பி. ப. 3-00 மணிவரை பத்திரப்பணம் ரூ. 50/-ம், வைப்புப்பணம் ரூ. 200/-ம் செலுத்துவதன் பேரில் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்களை நல்லூர் உப அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

ச. கருணைநாதன்
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்

யாழ். அபி. சபை உப அலுவலகம்,
நல்லூர், 24-09-1984. 1962

கொள்ளைகளின் எதிரொலி

# பளைப்பகுதி கூ. சங்கங்கள் திறக்கப்படவில்லை!

(நமது பச்சிலைப்பள்ளி நிருபர்)

பளைப் பகுதியில் நேற்றுமுன் தினம் மூன்று கூட்டுறவுச் சங்கங்கள், பெற்றோல்நிலையம் ஆகியன கார் ஒன்றில் வந்த ஆயுதம்தாங்கிய இளைஞர்களால் கொள்ளையடித்துச் செல்லப்பட்டன.

பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமையகத்தில் கடந்த ஒரு மாத காலத்தினுள் மூன்றாவது தடவையாக நடைபெறவிருந்த கொள்ளை, அங்கு பணம் இல்லாமையினால் நடைபெறாமல்போய்விட்டது.

இக்கொள்ளையின் எதிரொலியாக நேற்றுக் காலை பளைப் பகுதியிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் திறக்கப்படவில்லை.

கிளை முகாமையாளர்கள் கூட்டுறவுச்சங்க தலைமையகத்திற்குத் தமக்கு பாதுகாப்புத் தேடி வந்திருந்தார்கள்.

பளை பஸ் நிலையத்திற்கு அண்மையிலுள்ள பச்சிலைப் பள்ளி பலநோக்குக்கூட்டுறவு சங்க பெற்றோல் நிலையத்தில் சுமார் 400 ரூபாவும் சோரன் பற்றுக் கூட்டுறவுச் சங்கத்தில் சுமார் 500 ரூபாவும் செம்பியன்பற்று வடக்கு கூட்டுறவுச் சங்கத்தில் சுமார் 1090 ரூபாவும், செம்பியன் பற்று தரவை கூட்டுறவுச் சங்கத்தில் சுமார் 850 ரூபாவும் கொள்ளையடித்துச்செல்லப்பட்டுள்ளன.

பச்சிலைப்பள்ளி கூட்டுறவுச் சங்க தலைமையகத்திற்கு சென்ற இளைஞர்கள் அங்கு பணத்தினை தேடி, பணம் எதுவும் அகப்படாததினால் திரும்பி விட்டார்களாம். இச் சங்கம் ஒரு வாரத்திற்கு முன்பும் இரண்டாவது தடவையாக கொள்ளையடிக்கப்பட்டிருந்தது.

## இலங்கை வானொலிமீது முன்னாள் எம்.பிக்கள் வழக்கு

(கொழும்பு)

வானொலியில் ஒலிபரப்பப்பட்ட பாராளுமன்ற விவாதம் பற்றிய செய்தி தொடர்பாக முன்னாள் எம். பி.க்கள் மூவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

திரு. பி. ஒ. விமலநாக, அத்தவுட சௌவிரத்ன, டெனிசன் எதிரிசூரிய ஆகிய மூவருமே வழக்குத் தாக்கல் செய்தனர் இவர்களுள் திரு. செனவிரத்தின தொடர்ந்த வழக்கு நீதிமன்றத்திற்கு வெளியே தீர்வுகாணப்பட்டு விட்டது. மற்றும் இருவழக்கு விசாரணைகளும் இன்னும் முடியவில்லை.

இத்தகவல் பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஹக்மீமன எப். பி. திரு. றிச்சர்ட்பத்திரன ராஜாங்க அமைச்சரைக் கேட்ட கேள்விக்குப் பதில்அளிக்கையில்மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

இவ்வழக்குகளுக்காக கூட்டுத்தாபன வழக்கறிஞருக்கு 38,885 ரூபா வழங்கப்பட்டுள்ளது. நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் தவறான செய்தியைத் தந்த நிருபர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

## யாழ். ஐ. வி. சங்கத்தின் சாவகச்சேரி கிளையிலும் கொள்ளை

(சாவகச்சேரி)

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் சாவகச்சேரி கிளையில் நேற்று முன்தினம் இனந் தெரியாத இளைஞர் கோஷ்டி ஒன்று ஐயாயிரம் ரூபாவைத் துப்பாக்கி முனையில் கொள்ளையடித்துச் சென்றது.

சம்பவ தினம் நான்கு வாலிபர்கள் வெள்ளை நிறக் காரில் வந்தனர் எனவும், அவர்களில் மூவர் உள்ளே சென்று காசாளரிடம் இருந்த அன்றைய விற்று வரவுப் பணத்தை அபகரித்துச் சென்றனர் என தெரியவந்துள்ளது

இக் கொள்ளை பற்றி கிளை முகாமையாளர் சாவகச்சேரி பொலிசில் புகார் செய்துள்ளார்.

## உரிமைகோரி துண்டுப் பிரசுரம்

(கோண்டாவில்)

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நேற்று நடைபெற்ற கொள்ளைக்கு தமிழீழ புரட்சிகர மக்கள் விடுதலை இராணுவம் உரிமை கோரி சங்கத்தின் முன்னர் துண்டுப்பிரசுரம் ஒட்டியுள்ளது.

இத்துண்டுப்பிரசுரத்தில் தாங்கள் பொதுமக்களை துன்புறுத்துவதற்காக இம்முயற்சியில் ஈடுபடவில்லையெனவும், முதலாளித்துவ ஏகாதிபத்திய அரசாங்கத்திற்கு எதிராகவே இம்முயற்சியில் ஈடுபட்டதாகவும் குறிப்பிட்டுள்ளது.

"பழிச்சொல்லுக்கு ஆளாகாதீர்கள்

# கல்லூரிப் பகுதியிலிருந்து பொலிசாரைவெளியேற்றவும்

## 'ஹாட்லி' நிலைகுறித்து 'சிவா' ஜனாதிபதிக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

'யாழ்ப்பாணத்தில் பெருமை வாய்ந்தகல்லூரிகளான ஹாட்லிக்கல்லூரியையும் மெதடிஸ்த பெண்கள் கல்லூரியையும் அழித்தீர்கள் என்ற பழிச் சொல்லுக்கு ஆளாகாமல், கல்லூரிகளுக்கு அருகாமையில் இருக்கும் பொலிஸ் கமாண்டோப்படைகளை வாபஸ்பெற வேண்டும்''

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம், ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள அவசரக் கடிதம் ஒன்றில் வற்புறுத்திக் கேட்டுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'யாழ்ப்பாணத்தில் பெருமை வாய்ந்தகல்லூரிகளான ஹாட்லிக்கல்லூரியும் மகளிர்கல்லூரியும் இப்பொழுது பிள்ளைகள் செல்லாமல் இயங்காதநிலையில் கடந்த மூன்று கிழமைகளாக இருக்கின்றன.

''ஹாட்லிக் கல்லூரி பழமையும் பெருமையும் வாய்ந்தது மட்டுமல்லாமல், உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானிகளையும் வைத்திய நிபுணர்களையும் பொறியியலாளர்களையும் உருவாக்கியிருக்கிறது. அதேபோல மகளிர் கல்லூரியும் சிறப்பாக இயங்கிவந்தது.

''இப்படியான சிறப்பான கல்லூரிகளை அழித்தது என்ற பழிச்சொல்லுக்கு ஆளாகாமல் பாதுகாக்கவேண்டியது உங்கள் கடமை. எனவே உடனடியாக பொலிஸ் கமண்டோப் படையை இக்கல்லூரிக்கருகாமையிலிருந்து வாபஸ் பெறுமாறு வற்புறுத்திக்கேட்டுக் கொள்கின்றேன் (மா)

## "ஜூலை கலவரத்தினால் இலங்கை மக்கள்பெரிதும் பாதிப்பு!"

(நியூயோர்க்)

கடந்த ஆண்டு இலங்கையில் நிகழ்ந்த ஜூலைக் கலவரம் இலங்கை மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது.'' என்று இலங்கை வெளிநாட்டமைச்சர் ஜனாப் ஷாஹுல் ஹமீத் தெரிவித்தார்.

ஐ.நா ஸ்தாபனத்தின் 39வது கூட்டத்தொடரில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறுஅவர் குறிப்பிட்டார்.

ஜனாப் ஹமீத் தொடர்ந்து பேசியதாவது: ''இலங்கையின் ஸ்திரத்தன்மை. தீவிரவாதிகளின் நடவடிக்கைகளினால் பெரிதும் பாதிப்படைந்து வருகின்றது.

இலங்கை தீவிரவாதிகளுக்கு வெளிநாட்டுச் சக்தியொன்று பயிற்சியளித்து வருவதுடன் ஊக்கத்தையும் வழங்கி வருகின்றது.

கடந்த ஆண்டு இலங்கையில் நிகழ்ந்த ஜூலைக்கலவரத்தில் இலங்கை மக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். இலங்கை அரசாங்கம் சர்வகட்சி மகாநாட்டின் மூலம் இலங்கை இனப்பிரச்னையைத் தீர்க்க தீவிரமாக முயன்றுவருகின்றது'' என்றார்.

ஜனாப் ஹமீத் சர்வதேச பயங்கரவாதத்தை முறியடிக்க ஒரு சர்வதேச அமைப்பு ஐ நா.வின் ஒத்துழைப்புடன் உருவாக்கப்படவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். (கி)

## கூட்டணி நிலைமை

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கிய பிரமுகர்கள் இம்மாதம் 29ம் திகதி கொழும்பில் கூடி சர்வகட்சி மகாநாட்டில் கூட்டணியின் நிலைமை குறித்து ஆலோசனை நடத்தவுள்ளனர்.

இவ்வாலோசனைக் கூட்டத்தில் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம், செயலதிபர் திரு. அ அமிர்தலிங்கம், திரு. இரா சம்பந்தன், திரு. நீலன் திருச்செல்வம் உட்பட கூட்டணியின் பல பிரமுகர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இம்மாதம் 30ம் திகதி சர்வகட்சி மகாநாடு மீண்டும் கூடவிருப்பது தெரிந்ததே. (மா)

## கரவெட்டி, தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க பெற்றோல் நிலையங்களில் கொள்ளை

(மாவிட்டபுரம்)

கரவெட்டி ப. நோ. கூ. சங்க பெற்றோல் நிலையத்தில் மனேஜரைப் பயமுறுத்தி 5 பேர் கொண்ட கோஷ்டி 2,920 ரூபா 05 சதத்தை துப்பாக்கி முனையில் நேற்று முன் தினம் மாலை கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

இது பற்றி பெற்றோல் நிலைய மனேஜர் ஆழ்வாப்பிள்ளை கிருஷ்ணபிள்ளைபருத்தித்துறை பொலிசில் புகார் செய்துள்ளார்.

### தெல்லிப்பழை

தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்க பெற்றோல் நிலையத்திலிருந்தும் 3,144 ரூபா 62 சதத்தை துப்பாக்கி முனையில் 5 இளைஞர்கள் பம்பரைப் பயமுறுத்தி நேற்று முன்தினம் மாலை கொள்ளையடித்துச்சென்றுள்ளனர்.

இது பற்றி பாலன் புலேந்திரன் என்பவர்காங்கேசன்துறை பொலிசில் புகார் செய்துள்ளார். (வெ)

## அவசரகால விதிகள் தளர்த்தம்!

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் அவசரகாலச் சட்டத்தின் சில விதிகள் தளர்த்தப்பட்டுள்ளன.

மின்னேரியா, குண்டசாலை ஆகிய தொகுதிகளுக்கு இடைத் தேர்தல் நடைபெற விருப்பதையொட்டியே இவ் விதிகள் தளர்த்தப்பட்டுள்ளன.

## வல்வை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

கைதான ஜெகநாதன், சின்னத்துரை ஆகிய இருவரும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

## 2 பிரிவுகளாக நஷ்டஈடு

(மன்னார்)

''மன்னாரில் கடைகள் எரிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு இரண்டு பிரிவுகளாக நட்டஈடு வழங்கப்படவுள்ளது.

எரிந்த கடைகளின் கட்டடச் சொந்தக்காரர்களுக்கு தனியாகவும், எரிந்த கடைகளில் முதலீடு செய்து வியாபாரத்தை மேற் கொண்டவர்களுக்கு தனியாகவும் நட்டஈடுகள் வழங்கப்படவுள்ளது

எரிக்கப்பட்ட கடைகளின் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அரச நிதியும் கிடைத்தவுடன் நட்டஈடுகள் வழங்கப்படும்

இவ்வாறு மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் திரு அருந்தவச் செல்வம் தெரிவித்துள்ளார்.


## மரண அறிவித்தல்

### சிங்கராசா அந்தோனிப்பிள்ளை

(அச்சுவேலி தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிக் கிளை. அச்சுநகர் கூட்டுறவுச் சங்க செயற்குழு முன்னைநாள் உறுப்பினர்)

சிங்கராசா அந்தோனிப்பிள்ளை 23-9-84இல் காலமானார். இவர் காலஞ்சென்ற விக்ரோப்பிள்ளை சிங்கராசா, இராசம்ம தம்பதிகளின் அன்பு மகனும், றேசலினின் அன்புக் கணவரும், புனிதம், மரியதாசன் (லண்டன்), பெனிற்ரு (பிரான்ஸ்), மற்றீனு (பிரான்ஸ்), சுசி, டொறெக்ஸ், மதி, யூட் (பிரான்ஸ்), றெமி, றெஜி ஆகியோரின் அன்புத் தகப்பனும், குணறட்ணம், மனோகரன் (பிரான்ஸ்), மரியநாயகம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், நண்ஷி, நறுகீஸ், சகிவஜா, சஞ்சுதா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிச்சடங்குகள் 27-9-84 வியாழக்கிழமை காலை 8-30 மணியளவில் அச்சுவேலி புனிதசூசையப்பர் சேமக்காலையில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

''றூஸ் மகால்'',
பத்தமேனி,
அச்சுவேலி.

(1947)



## மரண அறிவித்தல்

### இ. செல்லப்பா

தையிட்டி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்ப்பாணம் பிரபல வர்த்தகருமாகிய (செல்லப்பா அன் கோ) இ. செல்லப்பா காலமானார். இவர் பொன்னம்மாவின் அன்புக் கணவரும், சிறீஸ்கந்தன், ஜெயமாலா, ஜெயமதி, ஜெயசிறீ ஆகியோரின் அன்புத் தந்தையும், தம்பிராசா (ஓமான்), சுந்தரராஜா (U. K), திலகவதி ஆகியோரின் அன்பு மாமனும், மயூரன், மாதுரன், சங்கீதா மதுசூதனன், கார்த்திகா, நிருத்திகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். ஈமக்கிரிகைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

(1987)


இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டுசெப்டம்பர் மாதம் 27ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Eelanadu Telephone 22389 - 24126.